# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 ஆனி 25 ஞாயிற்றுக்கிழமை (09-07-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:156


## அரசின் தீர்வு யோசனைகள் நோர்வே மூலம் புலிகளுக்கு!

### அமைச்சர் ஜயரட்ன தெரிவிப்பு

கொழும்பு,ஜுலை9

"இனப்பிரச்சினைக்குத் தீர்வாக - அதிகாரப் பகிர்வுக்கு வழிசெய்யும் விதத்தில் - அரசாங்கமும் ஐ.தே.கட்சியும் இணைந்து தயாரித்திருக்கும் அரசமைப்புச் சீர்திருத்த யோசனைகள் நோர்வே அரசாங்கம் மூலம் விடுதலைப் புலிகளுக்கு அனுப்பி வைக்கப்படும்."

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் செயலாளரும் அமைச்சருமான டி.எம்.ஜயரட்ன இவ்வாறு தெரிவித்திருக்கின்றார்.

"இந்த அரசமைப்புச் சீர்திருத்த யோசனைகள் குறித்து புலிகளுடன் பேச்சு நடத்தவும் அரசு தயாராக உள்ளது.

"இந்த நாடாளுமன்றத்தின் பதவிக்காலம் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 24ஆம் திகதி முடிவடைவதற்கு முன்னர் இந்த அரசமைப்புச் சீர்திருத்தத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கக் கூடியதாக இருக்கும் என எதிர்பார்க்கின்றோம்." - இப்படி அவர் மேலும் தெரிவித்திருக்கின்றார்.

## இனப்பிரச்சினைத் தீர்வில் இந்தியாவை திருப்திப்படுத்தும் விதத்தில் நடவடிக்கை

### டில்லியில் இருந்து கொழும்பு திரும்பிய பின் லக்ஷ்மன் தெரிவிப்பு

கொழும்பு,ஜுலை9

"இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தில் இந்தியாவைத் திருப்திப்படுத்தும் விதத்தில் இலங்கை நடவடிக்கை எடுக்கும்."

- இவ்வாறு தெரிவித்திருக் கின்றார் அமைச்சர் லக்ஷ்மன் ஜெயக்கொடி.

ஜனாதிபதி சந்திரிகாவின விசேட தூதுவராக இவ்வாரம் புதுடில்லிக்குச் சென்று இந்தியப் பிரதமர் வாஜ்பாய் மற்றும் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந்சிங் ஆகியோரைச் சந்தித்து பேசிவிட்டு கொழும்பு திரும்பிய பின்னா அமைச்சர் ஜெயக்கொடி இவ்வாறு தெரிவித்திருக்கின்றார்.

கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்றுக்கு நேற்றுப் பேட்டி அளித்த போதே அவர் இத்தகவலைத் தெரிவித்தார்.

ஜனாதிபதி சந்திரிகா வழங்கிய விசேட கடிதம் ஒன்றை அவர் எடுத்துச் சென்று இந்தியப் பிரதமரிடம் கையளித்திருந்தார்.

இந்தியப் பிரதமர் மற்றும் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஆகியோருடன் நடத்திய பேச்சுக்களின் விவரம் தொடர்பான அறிக்கை ஒன்றை இன்று ஜனாதிபதியிடம் நேரில்கையளிக்கவுள்ளேன். அதற்கு முன்னர் அது பற்றிய விவரங்களை வெளியிட முடியாது. என்றாலும் இனப்பிரச்சினை விவகாரத்தில் இந்

(12ஆம் பக்கம் பார்க்க)

## 6 விவசாயிகள் படையினரால் கைது!

மட்டக்களப்பு,ஜுலை9

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட எல்லையில் உள்ள சின்னவத்தை என்ற விவசாயக் கிராமத்தில் நேற்றுமுன்தினம் வயல் வேலையில் ஈடுபட்டிருந்த 6 தமிழ் விவசாயிகள் அருகில் உள்ள 28 ஆம் கொலணி இராணுவ முகாமிலிருந்து சென்ற படையினரால் கைது செய்யப்பட்டனர்.

நேற்று இவர்கள் 6 பேரும் மேல் விசாரணைகளுக்காக உகணையில்

(12ஆம் பக்கம் பார்க்க)

# தீர்வு யோசனைகளை நிராகரிக்கிறது கூட்டணி!

## அரசியல் சுயாட்சி இல்லாத திட்டமாம்

கொழும்பு,ஜுலை9

**இனப்பிரச்சினைக்குத் தீர்வாக அதிகாரப் பரவலாக்கலுக்கு வழி செய்யும் விதத்தில் அரசும் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும் இணக்கம் கண்டு தயாரித்துள்ள அரசமைப்புச் சீர் திருத்த யோசனைகளை தமிழர் விடுதலைக் கூட்டணி ஏற்க மறுத்து அதனை நிராகரிக்கின்றது.**

**தமிழர் அபிலாசைகளை பூர்த்தி செய்யக்கூடிய அரசியல் சுயாட்சியை இந்த அரசமைப்புச் சீர் திருத்த யோசனைகள் ஓரளவுகூட கொண்டிருக்கவில்லை என்று தமிழர் விடுதலைக் கூட்டணி உயர் வட்டாரங்கள் கருத்து வெளியிட்டுள்ளன.**

தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட உப தலைவர் வீ. ஆனந்தசங்கரி, மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பராராஜசிங்கம் ஆகியோர் இது குறித்துக் கருத்து வெளியிட்டுள்ளனர்.

அரசமைப்புச் சீர்திருத்த யோசனைகளின் சரியான வடிவம் தங்களிடம் ஒப்படைக்கவில்லையாயினும் அது குறித்துத் தங்களுக்குக் கிடைத்த தகவல்களின் அடிப்படை

(12ஆம் பக்கம் பார்க்க)



அகதிகள் அவலம் கடல் கடந்தாலும் ஓயாது போல ...

புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் அங்கம் II நாளைய உதயனில்!

## கப்பலில் போதிய பயணிகள் இல்லை

### நேற்று கிழங்கையும் ஏற்றி வந்தது

யாழ்ப்பாணம்,ஜுலை9

பருத்தித்துறைக்கும் திருகோணமலைக்கும் இடையில் சேவையிலீடுபட்டுவரும் 'சிற்றி ஒவ் றிங்கோ' கப்பலில் குறைந்த எண்ணிக்கையான பயணிகளே நேற்று வந்து சேர்ந்தனர்.

340 பேர் பயணம் செய்யக் கூடிய இந்தக் கப்பலில் 240 பேர் மட்டுமே நேற்று திருகோணமலையிலிருந்து பருத்தித்துறை வந்து சேர்ந்தனர்.

திருகோணமலையிலிருந்து யாழ்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## நாளை கப்பல் சேவை

யாழ்ப்பாணம்,ஜுலை9

பருத்தித்துறைக்கும் திருகோணமலைக்கும் இடையிலான சிற்றி ஒவ் றிங்கோ பயணிகள் கப்பல் சேவை நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

இந்தக் கப்பலில் பயணம் செய்வதற்கு யாழ்.சிவில் நிர்வாக அலுவலகத்தில் ரிக்கெட் பெற்றவர்கள் மட்டும் நாளைக் காலை 7 மணிக்கு மதிய உணவு மற்றும் பயண ஏற்பாடுகளுடன் சிங்கள மகாவித்தியாலயத்துக்கு சமுகமளிக்குமாறு யாழ்.சிவில் நிர்வாக அலுவலகத்தினர் அறிவித்துள்ளனர். (இ-5-7)

## நாவற்குழிப் பகுதியில் புலிகள் மீது தாக்குதல்!

கொழும்பு,ஜுலை9

நாவற்குழிப் பகுதியில் விடுதலைப் புலிகள் பயணம்செய்த ஜீப் ஒன்றையும் உழவு இயந்திரம் ஒன்றையும் படையினர் தாக்கி அழித்து விட்டதாக விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

படையினரின் தாக்குதலில் ஜீப் முற்றாகச் சேதமடைந்து விட்டதாகவும் உழவு இயந்திரம் பாரிய சத்தத்துடன் வெடித்துச் சிதறியதாகவும் அது மேலும் அறிவித்தது.

இதேவேளை - மீசாலை, செம்மணி மற்றும் நாகர்கோவில் பகுதிகளிலுள்ள படையினரின் முன்ன

(12ஆம் பக்கம் பார்க்க)

## குடாக் கடலில் மீன் பிடிக்க அனுமதி

யாழ்ப்பாணம்,ஜுலை9

குடாக்கடலில் இன்றுமுதல் மீன் பிடிப்பதற்கான அனுமதியைப் படையினர் வழங்கியுள்ளனர் என்று குருநகர் மீனவர்கள் தெரிவித்தனர்.

இந்தக் கடற் பகுதியில் பல நாள்களாகத் தடைப்பட்டிருந்த மீன்பிடித் தொழிலைச் செய்வதற்கு அனுமதிக்குமாறு குருநகர் கடற்தொழிலாளர் அமைப்புகள் படையினருடன் நடத்திய பேச்சுக்களை அடுத்தே இந்த அனுமதி வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பண்ணைப்பால கடற்பகுதி, கொழும்புத்துறை, பாசையூர், குருநகர் ஆகிய கடற்பகுதிகளில் கரையிலிருந்து 2 மைல் தூரத்தில் மீன் பிடிப்பதற்கான அனுமதி வழங்கப்பட்டிருப்பதாக மீனவர்களால் தெரிவிக்கப்பட்டது. (இ-5-51)

## மன்னார் ஊடாக குடாநாட்டுக்கு நுண் அலை தொலைபேசி வசதி!

### இன்னும் 2 வாரங்களில் சாத்தியமாகலாம்

வவுனியா,ஜுலை9

யாழ்ப்பாணத்துக்கு மன்னார் ஊடாக நுண்அலை (Micro Wave) மூலமாக தொலைபேசி வசதியை ஏற்படுத்தும் முயற்சி வெற்றியளிக்கும் சாத்தியம் ஏற்பட்டுள்ளது.

இதற்கு வசதியாக மன்னாரில் ஒரு தொலைத் தொடர்புக் கோபுரம் அமைக்கும் பணி ஏற்கனவே பூர்த்தியடைந்துள்ளது.

அந்தத்தொடர்புக் கோபுரத்துடன் இணைந்து இயக்க வேண்டிய கருவிகள் அடங்கிய 'கொண்ரெயினர்' நேற்று கொழும்பிலிருந்து மன்னாருக்கு அனுப்பி வைக்கப்பட்டதாக 'ரெலிக்கொம்' உயரதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

இந்த 'கொண்ரெயினரை' மன்னாருக்கு அனுப்புவதில் இருந்த இழுபறி காரணமாக இந்த முயற்சி

(12ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பு பகுதியில் குண்டுவீச்சு!

மட்டக்களப்பு,ஜுலை9

மட்டக்களப்பிலிருந்து 15மைல் தொலைவில் - வந்தாறுமூலைக்கு அண்மையில் உள்ள - திகிலிவெட்டை என்ற பகுதிமீது நேற்று முற்பகல் 10மணிமுதல் 11மணி வரை தொடர்ந்து விமானக்குண்டு வீச்சுத் தாக்குதல்கள் இடம்பெற்றன.

ஏற்பட்ட சேதவிவரங்கள் தெரியவரவில்லை. (உ-21)

## ஈழ அகதிப்பெண் ஒருவர் கடத்தப்பட்டுக் கொலை!

### இராமேஸ்வரத்துக்கு அருகில் பயங்கரம்

இராமேஸ்வரம்,ஜுலை9

இலங்கையிலிருந்து தமிழகம் நோக்கிச் சென்ற தமிழ் அகதிகள்17 பேரில் ஒருவரான இளம் பெண் ஒருவர் கடத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டிருக்கின்றார்.

இந்தச் சம்பவம் இராமேஸ்வரம் அருகே இடம்பெற்றுள்ளது.

இந்த அகதிகள் கடந்த வியாழனன்று தமிழகக் கடற்பரப்பிலுள்ள மண் திட்டுக்களில் இறக்கிவிடப்பட்டதாகவும் - (12ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## பிரசன்னா வைத்திய நிலையம்

இல. 15, பேரின்பநாயகம் லேன், கச்சேரி, யாழ்ப்பாணத்தில இயங்கி வந்த நிலையம் மீண்டும் அனைவரது நலன்கருதி அதே இடத்திலேயே 04-07-2000 முதல் இயங்கி வருகின்றது என்பதனை அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

- Dr. க. பாலசிங்கம்

(76320)

---

நவாலி தேவாலய அழிப்பில்

## 5 ஆம ஆண்டு நினைவுகள்



செல்வி
**ஹேமலதா செல்வராஜா**
(வவி)
(Grama Sevagar -J/134,
Former BSMS Student)

★ செல்வன். சா. பிரதீஸ்
(Navaly M.V. Student)
★ பி. கபிரியேற்பிள்ளை
(G.S., சில்லாலை)

09-07-1995 இல் இவர்களுடன் மரணித்த 157 பேரையும் நினைவு கூருகின்றோம்.
வருடாந்த நினைவு வழிபாட்டினை நடத்தும் நவாலி சென்ற். பீற்றர்ஸ் ஆலய நிர்வாகிகளையும் வணங்குகின்றோம்.
சாந்தி!

*070-212676*
*புலவர் வீதி,*
*நவாலி வடக்கு.*

திருமதி செ.செல்வராணி
குடும்பத்தினர்.

(C/12172)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்
10
-
05
-
1927



மறைவு
09
-
06
-
2000

திருமதி
**யோகம்மா சின்னத்தம்பி**

அன்பின் திருவுருவாய், அறத்தின் வழிநின்று, எமையெல்லாம் அன்போடும், பாசத்தோடும் வளர்த்தெடுத்த எமது அன்னையின் பிரிவுச் செய்தியறிந்து நேரில் வந்து ஆறுதல் கூறியோருக்கும், எமது துக்கத்தில் பங்கேற்றுக்கொண்டவர்களுக்கும், அனுதாபச் செய்தி அனுப்பியோருக்கும், மற்றும் பல வழிகளிலும் உதவிய அனைத்து அன்பு இதயங்களுக்கும் எமது உளமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்திபெற எல்லாம் வல்ல பரராஜசேகரனின் தாழ்பணிகின்றோம்.

- குடும்பத்தினர்

*வன்னியசிங்கம் வீதி,*
*இணுவில் தெற்கு.*

(76299)

---

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம்
1929
-
12
-
27



மறைவு
2000
-
06
-
10

**அமரா சின்னத்தம்பி மகேஸ்வரா**

அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நாளை (10-07-2000) திங்கட்கிழமை பகல் 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம். இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக் கொள்ளவும்.

*"அன்னவில்லா"*
*உரும்பிராய் வடக்கு,*
*உரும்பிராய்.*

திருமதி ம. இந்திரா
(மனைவி)

(76235)

---

## லயன்ஸ் கழக பதவியேற்பு வைபவம்

நல்லூர் லயன்ஸ் கழகத்தின் 2000-2001ஆம் ஆண்டு நிர்வாக பதவியேற்பு வைபவம் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு இலக்கம் 483, கஸ்தூரியார் வீதியிலுள்ள உறுப்பினரின் இல்லத்தில் தலைவர் லயன் தி.சற்குணராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக பிராந்தியம் 10இன் தலைவர் ஆர்.பரநிருபசிங்கம் கலந்துகொள்வார். (ஐ)

## பாதுகாப்புக்கு மண் மூடைகள்

மந்திகை மருத்துவமனையின் சத்திர சிகிச்சைக் கூடத்தைச் சுற்றிவர பாதுகாப்புக் கருதி நூற்றுக் கணக்கான மண் மூடைகளை எம்.எஸ்.எவ். நிறுவனம் அடுக்கி வைத்துள்ளது.

இந்த வைத்தியசாலையில் தினமும் 15க்கு மேற்பட்ட சத்திர சிகிச்சைகளை பிரெஞ்சு மருத்துவக் குழுவின் சத்திர சிகிச்சை நிபுணர்கள் மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது. (இ-109)

## தவணைப் பரீட்சை கோட்ட மட்டத்தில்

நெடுந்தீவுக்கல்விக்கோட்ட பாடசாலைகளுக்கிடையிலான இரண்டாம் தவணைப் பரீட்சை இம்முறை கோட்ட மட்டத்தில் நடைபெறவுள்ளதாக கோட்டக் கல்விப் பணிப்பாளர் க.அரசரட்ணம் தெரிவித்தார்.

நாளை திங்கட்கிழமை முதல் எதிர்வரும் 14ஆம் திகதிவரை ஆரம்பப் பிரிவுக்கான பரீட்சைகளும் 18ஆம் திகதி தொடக்கம் 22ஆம் திகதிவரை கனிஷ்ட, இடைநிலை வகுப்புகளுக்குமான பரீட்சைகளும் - நடைபெறும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-7)

---

## தேவை

எமது சங்கத்துக்கு
குரக்கன், கௌபி
தேவைப்படுகிறது.
வழங்குபவர்கள்
நேரடியாகத்
தொடர்பு கொள்ளவும்.

*பொது முகாமையாளர்,*
*யாழ் மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,*
*திருநெல்வேலி கிழக்கு.*
*கோப்பாய்.*

(C/12173)

---

**ஸ்ரீ செல்வா சினிமா**
யாழ்ப்பாணம்.
**தினசரி 10.30, 2.00**
**(ப.நே.)**
*பார்த்திபன், முரளி, மீனா*
நடித்த
**வெற்றிக் கொடி கட்டு**
புதிய வெளியீடு
(குடும்பச் சித்திரம்)
(76318)

---

## ராஜா

(யாழ்ப்பாணம்)
*ரஜனிகாந்த், சௌந்தர்யா, ரம்பா, ரகுவரன்*
நடித்த
**அருணாச்சலம்**
புதிய நேரம் 10.30, 2.00
அனேக ரசிகர்களின் வேண்டுகோளுக்கிணங்க மீண்டும் மிக விரைவில் விருந்தாகின்றது
**படையப்பா**
(C/12143)

---

**நாகம்ஸ்**
(சுன்னாகம்)
*கார்த்திக், ரோஜா*
நடிப்பில்
**உன்னிடத்தில் என்னைக் கொடுத்தேன்**
*காட்சிகள்: 11.00, 2.30*
(புதிய நேரம்)
**11-07-2000 முதல்**
**குழயிருந்த கோயில்**
(C/12174)

---

## லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி

**127, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.**

### பகுதிநேர விரிவுரையாளர்கள் தேவை

பின்வரும் பாடங்களை எமது கல்லூரியில் பகுதி நேர அடிப்படையில் கற்பிப்பதற்கு பொருத்தமானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

(1) ரோக விஞ்ஞானம்
(2) நாடி சாஸ்திரம்
(3) நஞ்சியல்

*தகைமை:* D.A.M *அல்லது* B.S.M.S. *பரீட்சையிற் சித்தி.*
வயதெல்லை:- 25-55 வயது

(4) சமஸ்கிருதம

*தகைமை:*
*சமஸ்கிருதத்தை ஒரு பாடமாகக் கொண்ட பட்டதாரி.*

**வேதனம்: மணித்தியாலமொன்றுக்கு ரூ 100/- வீதம் மாதமொன்றுக்கு 10 மணித்தியாலங்களுக்கு வேதனம் வழங்கப்படும்.**

பொருத்தமானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கிடைக்காத பட்சத்தில் வடஇலங்கை சுதேச வைத்தியசபை தற்காலிகமாக ஒரு வருடத்திற்கு பொருத்தமானவர்களை நியமிக்கும்.

**விண்ணப்ப முடிவுத் திகதி:**
**19-07-2000**

*- பதிவாளர்*

(76282)

---

# மரண அறிவித்தல்கள்

## தம்பையா நடராசா

(ஓய்வுபெற்ற பிரதி அதிபர், இணுவில் மத்திய கல்லூரி)

இணுவில் மேற்கைச் சேர்ந்தவரும், இணுவில் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா நடராசா அவர்கள் 07-07-2000 வெள்ளிக்கிழமையன்று காலமாகிவிட்டார்.

இவர் திருமதி கமலாம்பிகையின் அன்புக் கணவரும், இராஜேஸ்வரி, நீலாம்பாள், தவமணிதேவி ஆகியோரின் சகலனும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் யாவும் (07-07-2000) வெள்ளியன்று நடைபெற்றன. இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

*இணுவில் தெற்கு,*
*இணுவில்.*

(76298)

## சதாசிவம் சிவபாலன் (B.Sc.)

(கணக்காளர், கனடா)

தம்பசிட்டியைப் பிறப்பிடமாகவும் கனடா, ரொரண்டோவை வசிப்பிடமாகவும் கொண்ட சதாசிவம் சிவபாலன் 06-07-2000 அன்று கனடாவில் அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற சதாசிவம் - பூபதியம்மா தம்பதியினரின் மகனும் சகுந்தலாதேவி (அதிபர், புற்றளை மகாவித்தியாலயம்), நரேந்திரன் (பதவி நிலை தொழில்நுட்ப உத்தியோகத்தர், யாழ். பல்கலைக் கழகம்), அருந்ததிதேவி, சுந்தரமூர்த்தி (உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆங்கிலம், வடமராட்சி வலயம்), பூமாதேவி, குமுதமலர் (தாதிய உத்தியோகத்தர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்), சோதிமயம் (ஆசிரியை, தம்பசிட்டி மெ.மி.பாடசாலை), ரவீந்திரன் (இங்கிலாந்து) ஆகியோரின் அன்புச் சகோதரனும் இந்திரராஜா (மெற்றலிக்ஸ், கொழும்பு), சர்வேஸ்வரி (ஆசிரியை, யாழ். இந்து மகளிர் கல்லூரி), அற்புதராணி (ஆசிரியை, வட இந்து மகளிர் கல்லூரி), புண்ணியமூர்த்தி (நகரசபை, பருத்தித்துறை), ரவீந்திரன் (ஆசிரியர், ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (08-07-2000) சனிக்கிழமை கனடாவில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

*216, தம்பசிட்டி வீதி,*
*பருத்தித்துறை.*

(C/12180)

## செல்வி லைலாதேவி இரத்தினசபாபதி

செல்வி லைலாதேவி இரத்தினசபாபதி நேற்று (08-07-2000) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினசபாபதி - சிவபாக்கியம் தம்பதியினரின் அன்பு மகளும் பரராஜசிங்கம் (இரத்தினசபாபதி அன் சன்ஸ், யாழ்ப்பாணம்), கமலாதேவி (ஆசிரியை, யாழ். செங்குந்தா இந்துக் கல்லூரி), விமலாதேவி (ஆசிரியை, யாழ்.சென்மேரிஸ் பாடசாலை), இலங்கரட்ணா (கச்சேரி, மட்டக்களப்பு), சந்திராதேவி, குணரட்ணா (சிவபதி புடைவையக உரிமையாளர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் க.சி.இராஜேஸ்வரன் (கொழும்பு), சிவபாலராஜா (சுகாதாரப் பரிசோதகர், யாழ். போதனா வைத்தியசாலை), இராசலட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனியும் கல்யாணி (கனடா), மயூரன் (கொழும்பு), வசிகரன், பரதன் (யாழ். பரியோவான் கல்லூரி) ஆகியோரின் அன்புச் சிறிய தாயாரும் சுஜிவனின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 14, சட்டநாதர் வீதியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் இன்று (09-07-2000) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 3.00 மணியளவில் செம்பாடு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ.பரராஜசிங்கம்
(சிறி - சகோதரன்)

*14, சட்டநாதர் வீதி,*
*நல்லூர்,*
*யாழ்ப்பாணம்.*

(76322)

### பலத்த எதிர்ப்பையும் மீறி நடத்தப்பட்ட

# அமெரிக்க ஏவுகணைப் பரிசோதனை மூன்றாவது முறையாகவும் தோல்வி!

## 10 கோடி டொலர் செலவிலான பாதுகாப்புத் திட்டம் பிசுபிசுப்பு!

வாஷிங்டன், ஜூலை 9

பல உலக நாடுகளின் எதிர்ப்பையும் மீறி அமெரிக்கா நடத்திய தேசிய ஏவுகணைப் பாதுகாப்புத் திட்டத்தின் மூன்றாவது சோதனை தோல்வியில் முடிவடைந்து விட்டது.

கலிபோர்னியாவில் லக்சம் பேர்க் இராணுவ விமான நிலையத்திலிருந்து போலி அணுகுண்டு ஒன்றுடன் ஏவப்பட்ட ரொக்கெட்டை பசிபிக் வான் பகுதியில் 230 கிலோ மீற்றர் உயரத்தில் வைத்து ஏவுகணை எதிர்ப்பு ஏவுகணை தாக்கி அழிக்கும்படியாக இந்தச் சோதனை திட்டமிடப்பட்டிருந்தது.

இலங்கை நேரப்படி நேற்றுப் பகல் 10-40 மணிக்கு ஏவப்பட்ட எதிர்ப்பு ஏவுகணை 10 நிமிடங்கள்கழித்து மணிக்கு 24 ஆயிரம் கிலோ மீற்றர் வேகத்தில் போலி அணுகுண்டைத் தாக்கிவரும் ரொக்செட்டைத் தாக்கி அழிக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் ஏவுகணையால் ரொக்கெட்டைக் கண்டு பிடித்து தாக்கியழிக்க முடியாமற் போகவே இந்தச் சோதனை தோல்வியில் முடிவடைந்தது.

இந்த 10 கோடி டொலர் சோதனைத் திட்டம் 1972 இல் ஏற்படுத்தப்பட்ட 'யனிஸ்டா' உடன்படிக்கைக்கு எதிரானது என்று கூறி ரஷ்யா உட்பட பல உலக நாடுகள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தது குறிப்பிடத்தக்கது. (ஐ-ஒ)

## தடையை அகற்ற பிரிட்டன் முடிவு

லண்டன், ஜலை 9

பாகிஸ்தானுக்கு ஆயுதங்கள் விற்பனை செய்வதற்கான தடையை அகற்ற முடிவு செய்துள்ளதாக பிரிட்டன் அறிவித்துள்ளது.

பாகிஸ்தானில் ஜனநாயக ஆட்சியைக் கவிழ்த்து இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றியதைத் தொடர்ந்து பிரிட்டன் இந்தத்தடையை அமுலாக்கியது தெரிந்ததே. (ஐ-ஒ)

## ஆஸி. பிரதமர் இந்தியா விஜயம்

ஆஸ்திரேலியப் பிரதமர் ஜோன் ஹாவோர்ட் இந்தியாவுக்கு இந்த வாரம் விஜயம் செய்ய உள்ளார்.

மோசமடைந்துவரும் பிஜி நிலைமையைச் சீராக்க இரு நாடுகளும் சேர்ந்து மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக இந்த விஜயத்தின் போது முக்கியமாக ஆலோசனை நடத்தப்படும் என்று பிரதமர் அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஐ-ஒ)

## பாக். இராணுவ ஆட்சியாளரால் ஷெரீப் ஆதரவாளர்கள் கைது!

இஸ்லாமாபாத், ஜூலை 9

பாகிஸ்தானில் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீபின் முஸ்லிம் லீக் கட்சியைசேர்ந்த நூற்றுக்கணக்கான தொண்டர்களை இராணுவ ஆட்சியாளர்கள் கைது செய்துள்ளனர்.

வரட்சி நிவாரண நிதி திரட்டுவதற்காக ஷெரீப்பின் மனைவி லாகூரில் இருந்து பெஷாவர் வரை ஊர்வலம் நடத்தத் திட்டமிட்டிருந்தார்.

இந்த ஊர்வலத்தைத் தடுப்பதற்காகவே முஸ்லிம் லீக் ஆதரவாளர்கள் பெருமளவில் கைது செய்யப்படுவதாகக் கூறப்படுகிறது.

கடந்த ஆண்டு ஒக்ரோபரில் நவாஸ்ஷெரீப் கைது செய்யப்பட்ட பிறகு திருமதி ஷெரீப் இராணுவ ஆட்சிக்கு எதிராகத் தீவிரப் பிரசாரம் செய்து வருவது குறிப்பிடத்தக்கது. (ஐ-ஒ)

## பிஜியில் நெருக்கடி தீவிரம்!

# கிளர்ச்சியாளர்களால் மேலும் 3o பேர் பணயம்

சுவா, ஜூலை 9

பிஜியில் கிளர்ச்சித் தலைவர் ஜோர்ஜ் ஸ்படைட்டின் சொந்த ஊரான கராவோவில் அவரின் ஆதரவாளர்கள் காவல் நிலையம் ஒன்றைத் தமது கட்டுப்பாட்டில் எடுத்துக்கொண்டுள்ளனர். அத்துடன் 30பேரைச் சிறைப் பிடித்தும் உள்ளனர்.

அதேசமயம் பிஜியின் சர்வதேச விமான நிலையத்திற்குச் செல்லும் பாதை கிளர்ச்சியாளர்களால் மூடப்பட்டு விட்டது.

இதற்கிடையில் —

நாடாளுமன்றத்தில் சிறை வைக்கப்பட்டுள்ள 27 பேரையும் விடுவிக்கக் கிளர்ச்சியாளர்களுக்குக் கொடுத்த அவகாசத்தை இராணுவம் மேலும் ஒரு நாள் நீடித்துள்ளது. ஆனால் புதிய சிவில் அரசு பதவி விலகி ஆட்சியைப் பழங்குடித் தலைவர்களிடம் ஒப்படைத்தாலேயே மகேந்திர சௌத்ரி உள்ளிட்ட 27 பேரும் விடுவிக்கப்படுவார்கள் எனக்கிளர்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கடைசியாகக் கிடைத்த தகவல்களின்படி—

நாட்டின் பல பகுதிகளிலும் ஸ்பைட்டின் ஆதரவாளர்கள் கிளர்ச்சியில் இறங்கியுள்ளதாகவும் —

இராணுவத் தளபதி பிராங் பைனிமராமா உடனடியாகப் பதவி விலக வேண்டும் என்று கிளர்ச்சித் தலைவர் ஜோர்ஜ்ஸ்பைட் கோரியிருப்பதாகவும் —

தெரியவந்துள்ளது. (ஐ ஒ)

## தென்கிழக்கு ஐரோப்பாவில்நிலவும் கடும் வெப்பத்துக்கு 9 பேர் பலி!

### நூற்றுக்கணக்கானோர் மருத்துவமனையில்

அங்கரா, ஜூலை 9

ஐரோப்பாவின் தென்கிழக்குப் பகுதியில் நிலவும் கடும் வெப்பத்துக்கு 9 பேர் பலியாகியுள்ளனர். மேலும் பலர் வெப்பத்தினால் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

துருக்கியில் வெயிலின் கொடுமையினால் 4 பேர் உயிரிழந்துள்ளனர். காடுகளில் மூண்ட தீயினால் பெரும் அளவு மரங்கள் எரிந்துபோயுள்ளன.

பல்கேரியாவில் கடந்த நூறு ஆண்டுகளில் முதல் முறையாக வெப்பநிலை 43 டிகிரி செல்சியஸ் ஆக உயர்ந்துள்ளது. இதனால் சுமார் ஆயிரம் ஹெக்டேயர் பரப்பளவில் விளைந்திருந்த உணவுப் பயிர்கள் கருகி நாசமாகி விட்டன.

தொடர்ந்தும் வெப்பநிலை அதிக அளவாகவே இருப்பதால் சேதங்களும் இறப்புகளும் மேலும் அதிகமாகி வருவதாகக் கூறப்படுகிறது (ஐ-ஒ)

## புலிகளுக்கு ஆதரவான கட்சிகளைத் தடை செய்க!

### வாழப்பாடி ராமமூர்த்தி கோரிக்கை



சென்னை, ஜூலை 9

விடுதலைப் புலிகளின் கைப்பாவைகளாகச் செயற்படும் ம. தி.மு.க. மற்றும் பா.ம.க ஆகிய வற்றைத் தடைசெய்ய வேண்டும் என்று தமிழக ராஜீவ் காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி கோரியுள்ளார்.

தமிழகத்தில் பொதுக் கூட்டம் ஒன்றில் பேசிய போது அவர் இதனைக் கூறினார்.

அவர் அங்கு பேசுகையில் மேலும் கூறியதாவது —

தமிழகத்தில் இந்த இரு கட்சிகளும் பிரிவினை வாதத் தூபம் போடுகின்றன. ம.தி.மு.க, 'விடுதலைப்பாசறை' என்றபெயரிலும் பா.ம.க 'பேச்சாளர்பாசறை என்றபெயரிலும் அரசியல்ப் பிரிவுகளை நடத்துகின்றன.

இவற்றில் பிரிவினையைப் பரப்புவதற்காக இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

இவ்வாறு வாழப்பாடி ராமமூர்த்தி கூறினார். (ஐ-ஒ)

## கமலஹாசனின் 'ஹேராம்' 3தேசிய விருதுகளை வென்றது!



புதுடில்லி, ஜூலை 9

இந்தியாவில் கமலஹாசனின் 'ஹேராம்' மூன்று தேசியத் திரைப்பட விருதுகளைப் பெற்றுள்ளது. அவற்றில் உடையலங்காரத்துக்கான (காஸ்டியூம்) விருது கமலின் மனைவி சரிகாவுக்குக் கிடைத்துள்ளது.

சிறந்த பாடலாசிரியருக்கான விருது கவிஞர் வைரமுத்துவுக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த விருது 4 ஆவது தடவையாக இவருக்குக் கிடைத்துள்ளது.

தமிழில் சிறந்த திரைப்படமாக விக்ரம் நடித்த 'சேது' தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

தேசிய விருதுகளில் அகில இந்திய அளவில் சிறந்த திரைப்படமாக 'வானப்பிரஸ்தம்' என்ற மலையாளப் படமும் அதில் நடித்த மோகன்லால் சிறந்த நடிகராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு விருது வழங்கப்பட்டுள்ளது.

மேற்கண்டவர்கள் உட்பட பரிசுபெற்ற அனைவருக்கும் விருது வழங்கும் விழா விரைவில் நடைபெற உள்ளது. (ஐ—ஒ)

## மருத்துவச் செலவு உயர்வுக்கு மத்திய அரசே காரணம்!

### வி. பி. சிங் குற்றச்சாட்டு



புதுடில்லி, ஜூலை 9

இந்தியாவின் முன்னாள் பிரதமர் வி. பி. சிங். தனது வெளிநாட்டு மருத்துவத்திற்கான செலவு 7 கோடி 18 லட்சம் ரூபாயாக உயர்ந்ததற்கு மத்திய அரசே காரணம் என்று குற்றஞ்சாட்டியுள்ளார்.

வெளிநாட்டில் தன்னுடன் வந்திருந்த சிறப்புப் பாதுகாப்புப் படையினர் தங்குவதற்கு 4 கோடி 8 லட்சம் ரூபா செலவானதாகவும், மருத்துவத்திற்கு சுமார் 3 கோடி ரூபாவே செலவானதாகவும் வி. பி. சிங் கூறியுள்ளார்.

சிறப்புக் காவலைத் திரும்பப் பெறும்படி முன்னரே தான் மத்திய அரசிடம் வலியுறுத்தியதாகவும், ஆனால் அரசு அதனை உதபசீனப்படுத்தி விட்டதாகவும் அவர் கூறினார்.

சிறப்புக் காவலுக்கு ஏற்பட்ட செலவைத் தன் மருத்துவச் செலவுடன் சேர்த்து அரசு கூறியிருப்பது தவறான கருத்தை உருவாக்கும் என்றும் சிங் கூறினார்.

4 ஆண்டுகளாக வி. பி. சிங் இங்கிலாந்தில் மருத்துவ சிகிச்சை பெற்று வந்தது தெரிந்ததே. (ஐ-ஒ)

## பயணிகளுக்கு கோரிக்கை

காத்மண்டு, ஜூலை 9

இந்தியா மற்றும் நேபாளம் இடையே விமானப் பயணம் மேற்கொள்ளும் இரு நாட்டுப் பிரஜைகளும் தம்மை அடையாளப்படுத்தும் சான்றிதழ் ஏதாவது ஒன்றை வைத்திருக்க வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.

தரைவழிப் போக்கு வரத்துக்கு இந்தக் கட்டுப்பாடு கிடையாது.

இந்த இரு நாடுகளுக்கும் இடையில் இதுவரை திறந்த வெளிப் போக்கு வரத்து முறை நடைமுறையில் இருந்து வருகிறது. எனினும் அண்மையில் நேபாளம் சென்ற இந்திய விமானம் கடத்தப்பட்டதைத் தொடர்ந்து தீவிர பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (ஐ-ஒ)

## இறந்ததாகக் கருதப்பட்டவர் உயிர் பெற்று எழுந்தார்

கேப்டவுன், ஜூலை 9

தென்னாபிரிக்காவில் விபத்தில் சிக்கிய ஒருவரை இறந்துவிட்டதாகக் கருதி மருத்துவமனைப் பிரேத அறைக் குளிர்சாதனப் பெட்டியில் வைத்தனர்.

மூன்று தினங்களின் பின் அவர் சுயநினைவடைந்து பிரேத அறையிலிருந்து எழுந்து வந்தார்

இதனால் இறந்தவர் ஆவியாக வருவதாக எண்ணிய மருத்துவமனை ஊழியர்கள் அலறி அடித்தபடி ஓடினார்கள்.

உயிரோடிருந்தவரை இறந்ததாகக் கூறிய மருந்துவர்கள் மீது தற்போது வழக்குத் தொடுக்கப்பட்டுள்ளது. (ஐ—ஒ)

# சோளம் அறுவடை விழா

ஐ. நா. அபிவிருத்தித்திட்ட நிதியுதவியுடன் புத்தூர் விவசாய போதனாசிரியர் பிரிவில் சிறுபோகத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட சோளச் செய்கையின் அறுவடைவிழா நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு புத்தூர் வடக்கு வைரவர் கோயிலடியில் நடைபெறவுள்ளது.

இந்தநிகழ்வில் வலி.கிழக்கு பதில் பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளை பிரதமவிருந்தினராக கலந்து கொள்வார்.

அத்துடன் நிகழ்வின் வரவேற்புரையை புத்தூர் விவசாய போதனாசிரியர் இ. சௌந்தரராஜனும், தலைமையுரையை யாழ். மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் ச. சின்னத்துரையும் நிகழ்த்தவுள்ளனர்.

(இ-10)

# நல்லூர் வரலாற்றுச் சான்றுகளை பாதுகாப்பதற்கு நடவடிக்கை!

தற்சமயம் பராமரிக்கப்படாத நிலையில் படிப்படியாக அழிந்துவரும் புராதன சான்றுகளானஜமுனாரி, நல்லூர் ராஜதானி, மந்திரிமனை கோட்டை வாயில் என்பவற்றைப் பாதுகாக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

நல்லூர் பிரதேச செயலர் கலாநிதி க. குணராசா தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டத்தில் குறிப்பிட்ட வரலாற்றுச் சான்றுகளைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளை எடுப்பதாகத் தீர்மானிக்கப்பட்டது.

இக் கூட்டத்தில் யாழ். மாநகர சபை அதிகாரிகள் மேற்படி சான்றுகள் அமைந்துள்ள பகுதிகளின் கிராம அலுவலர்கள் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(ஐ - 111)

## பணியாளருக்கு நிதி உதவி

பண்டத்தரிப்பு பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் பனையில் இருந்து இடம்பெயர்ந்த பனை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க பணியாளர்களுக்கும், உறுப்பினர்களுக்கும் 10 ஆயிரம் ரூபாவை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

வடமாகாண தெங்குபனம் பொருள் உற்பத்தி, விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் ஊடாக இந்த நிதி உதவி அண்மையில் வழங்கப்பட்டுள்ளதாக சங்கத்தின் பொது முகாமையாளர் கி. குணரத்தினம் தெரிவித்தார்.

இதேவேளை —

இடம்பெயர்ந்த தென்மராட்சி பிரதேசத்தை சேர்ந்த பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர் மூவருக்கு இச்சங்கத்தில் வேலை வாய்ப்பும் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-135)

## திருட்டு

சித்தன்கேணி சந்திக்கருகாமையிலுள்ள வீடு ஒன்றில் விடப்பட்டிருந்த மூன்று சைக்கிள்கள் இரவு வேளையில் திருடப்பட்டுள்ளன.

சித்தன்கேணி — சங்கானை பிரதான வீதியிலுள்ள இவ் வீட்டில்கடந்த மாதம் 29 ஆம் திகதி வியாழக்கிழமை இரவு இத்திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வீட்டு உரிமையாளர் இத்திருட்டு சம்பவம் குறித்து சுன்னாகம் பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததை அடுத்து பொலீஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

(ஐ-135)

## ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம்

உடுவில் பிரதேச அத்தியாவசிய சேவைகள் நலன்புரி நிலையங்களின் ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் எதிர்வரும் 12 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் பத்துமணிக்கு உடுவில் பிரதேச செயலக மாநாட்டுமண்டபத்தில் நடைபெற இருக்கின்றது. (ஐ-152)

## சமய சந்நிதிகளில்

சுதுமலை தெற்கு எச்சாட்டி வைரவர் ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவம் இம்மாதம் 2 ஆம்திகதி முதல் ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

உற்சவத்தின் இறுதி நாளான நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை அபிஷேக ஆராதனைகள் நடைபெற்று மாலை 5 மணிக்கு சுவாமி வீதியுலா வருதல் இடம்பெறும். (இ-10)

* * *

தென்புலோலி குரும்பைகட்டி ஞானவைரவர் கோயில் வருடாந்த வேள்வி உற்சவம் எதிர் வரும் 15 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது. (ஐ-173)

## இடம்பெயர்ந்த மக்களுக்கு செஞ்சிலுவை மருத்துவசேவை

யாழ்.நகரில் இருந்து இடம்பெயர்ந்து சென்று சங்கானை, சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுகளில் உள்ள முகாம்களில் தங்கியிருக்கும் மக்களுக்கான மருத்துவப் பரிசோதனைகள், சிகிச்சைகளை இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை மேற்கொண்டு வருகிறது.

வைத்திய கலாநிதி வை. தியாகராசா தலைமையில் யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்கள் தினசரி 150 நோயாளர்களைப் பரிசோதனை செய்து சிகிச்சையளிக்கின்றனர்.

மே மாதம் 19 ஆம் திகதி முதல் நடைபெறும் இம்மருத்துவப் பரிசோதனையில் இதுவரை 6 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். இவர்களுக்குத் தேவையான மருந்துகள் செஞ்சிலுவைச் சர்வதேசக்குழுவால் வழங்கப்படுகிறது. (ஐ-111)

# மரண அறிவித்தல்கள்

## மயில்வாகனம் சிவானந்தம்

143/4, பிரப்பங்குளம் ஒழுங்கை, வண்ணார் பண்ணை மேற்கைப் பிறப்பிடமாகவும், 100/1, கௌடான வீதி, தெகிவளையை வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் சிவானந்தம் (5-7-2000) அன்று புதன்கிழமை இரவு காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம்-மங்கையர்க்கரசியினது மகனும் காலஞ் சென்றவர்களான வேலாயுதபிள்ளை- பார்வதிப்பிள்ளையின் அருமை மருமகனும் காலஞ்சென்றவரான உருத்திரபசுபதி, நாகேந்திரத்தின் (ஓய்வுபெற்ற முகாமையாளர் இலங்கை வங்கி மானிப்பாய்), அன்புச்சகோதரரும் இந்திராணியின் அன்புக்கணவரும் சிவகுமார் (கணக்காளர், மாலைதீவு), சாந்திக்குமார் (பொறியியலாளர், சவூதிஅரேபியா), சுகந்தி (றொகான் எம்போறியம்), சசிக்குமார், (மருத்துவ பீடம், யாழ். பல்கலைக்கழகம்), சுதமதி (மாணவி கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும் திரு. திருமதி கிருஷ்ணாநந்தன் (கனடா), திரு. திருமதி சற்குணேந்திரன் (கனடா), திரு. திருமதி அசோகன் (பிரான்ஸ்), ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் இன்று(9-7-2000) ஞாயிற்றுக்கிழமை அவரது (தெகிவளை) இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:-
ம. நாகேந்திரம்
(ஓய்வு பெற்ற முகாமையாளர்,
இலங்கை வங்கி மானிப்பாய்)

மானிப்பாய், (76316)

## சிவக்கொழுந்து கண்ணன்

(உரிமையாளர், வடலங்கா புத்தகசாலை,
கலாபவன அச்சகம், பருத்தித்துறை.)

வியாபாரி மூலையைச் சேர்ந்த அமரர் சிவக்கொழுந்து (கவிஞர் யாழ்ப்பாணம்) நவமணி தம்பதிகளின் ஏகபுதல்வன் கண்ணன் 30-06-2000 ஆம் திகதி காலமானார்.

அன்னார் சிவமனோகரியின் அன்புக் கணவரும், திரு. திருமதி சிவசுப்பிரமணியம் தம்பதிகளின் அன்பு மருமகனும், திரு. திருமதி திருநாவுக்கரசு- இராசம்மா தம்பதிகளின் பெறாமகனும், திரு. திருமதி முருகேசு- பாக்கியம், திரு. திருமதி சுவாமிநாதன்- மனோன்மணி தம்பதிகளின் மருமகனும் சிவரத்தினத்தின் சகலனும், ஜெகதீஸ்வரி, பவானி (அமரர்), மங்களேஸ்வரி, சிவதேவி ஆகியோரின் சகோதரரும் சிறிகாந்தன், இசைவாணி, சிறிதரன் ஆகியோரது ஒன்றுவிட்ட சகோதரரும் அமரர் Dr. என். இராசரத்தினம், வே. நடராசா, சி. நித்தியானந்தன், செ. தவதுரைநாதன், சி. சிவமணி, திருமதி சிவச்செல்வி, சு. சிவபாலன் (பிரதி பிரதம செயலாளர் (நிதி) வடக்கு — கிழக்கு மாகாணசபை), ஜெயபாலன் (ஆஸ்திரேலியா), ஜெயதர்சினி(ஆஸ்திரேலியா), ஜெயகௌரி (ஆஸ்திரேலியா) மு ஜெயகாந்தன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் 30. 6. 2000 ஆம் திகதி நடைபெற்றன. இந்தத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி ஜெகதீஸ்வரி இராஜரத்தினம்
(சகோதரி)

வியாபாரி மூலை,
பருத்தித்துறை. (சி/12178)

## திருமதி விசாலாட்சி தில்லையம்பலம்

(ஓய்வுபெற்ற ஆசிரியை)

நவாலி வடக்கு மானிப்பாயைச் சேர்ந்த திருமதி விசாலாட்சி தில்லையம்பலம் (ஓய்வுபெற்ற ஆசிரியை) 08 - 07 - 2000 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தில்லையம்பலம் அவர்களின் அன்பு மனைவியும் ஸ்ரீ முருகானந்தன் (கொழும்பு), ஸ்ரீரங்கநாயகி சுந்தரலிங்கம் (ஸ்ரீலங்கா டெலிகொம் யாழ்ப்பாணம்), தயாநிதி (பிரான்ஸ்), சத்தியசிறீ ஆகியோரின் அருமைத் தாயாரும் தர்மபாலன், தர்மலிங்கம், சுதந்திரபாலன் (கணக்காளர், சுகாதாரப் பகுதி வடக்கு — கிழக்கு மாகாண சபை) ஆகியோரின் அன்புச் சிறியதாயாரும் நல்லமுத்து — சண்முகநாதன், சரஸ்வதி யோகராஜா, பாலசுப்பிரமணியம் ஆகியோரின் அருமைச் சகோதரியும், சுந்தரலிங்கம், சுவர்ணலதா, சந்திரலிங்கம், வசந்தாதேவி, சிதம்பரேஸ்வரி, வேதநாயகி ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 08 - 07 - 2000 சனிக்கிழமை மாலை 3.00 மணியளவில் பிப்பிலி மயானத்தில் நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:
ஆ. சுந்தரலிங்கம்
(மருமகன்)

நவாலி வடக்கு,
மானிப்பாய். (12179)


## வீதி திறப்பு விழா வைபவம்

நிகழும் ஆடி மாதம் (12 - 07 - 2000) 12ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணியளவில் அறிஞர் ஐயன்னா சனசமூக நிலையத்திற்கு அண்மையில், காலஞ் சென்ற வைத்திய கலாநிதி ஆ. நடராசா அவர்களை நினைவு கூருமுகமாக

வைத்தியகலாநிதி ஆ. நடராசா வீதி.

திறப்புவிழா நடைபெறும்.

ந. அரசரத்தினம்
தலைவர்
அறிஞர் ஐயன்னா சனசமூக நிலையம்
(சி-12176)

## பாராட்டுகிறோம்

எமது கிராம அபிவிருத்திச் சங்க தனாதிகாரியும் யாழ். பலநோக்குக் கூட்டுறவுச்சங்க பொதுச்சபை உறுப்பினரும் குமரன் (கிளை 8) கிளைக்குழுத் தலைவரும் யாழ். கொட்டடி சனசமூக நிலைய உபதலைவரும் வண்ணை கதிர்வேலாயுதசுவாமி கோயில் அறநெறிப் பாடசாலை நிர்வாக உறுப்பினரும் இளங்கதிர் இளைஞர் கழக ஆலோசகரும் பிரபல சமய, சமூகத் தொண்டனுமான

### திரு. நாகலிங்கம் தனேந்திரன்

அவர்களின் சேவையைக் கௌரவித்தும் எமது கிராம மக்களின் நீண்ட நாள் குறையினை நிவர்த்தி செய்யும் வகையிலும் நீதி நிர்வாக அமைச்சினால் சமாதான நீதிவான் பட்டம் வழங்கப்பட்டுள்ளது.

இதனையிட்டு எமது நிர்வாகமும் மக்களும் பெருமிதமடைகிறார்கள்.

கொட்டடி கிராம அபிவிருத்திச் சங்க
உறுப்பினர்களும் மக்களும்.
(76294)

## மூக்குக்கண்ணாடி வழங்கல்

சுன்னாகம் லயன்ஸ் கழகத்தினரால்

12—07—2000

புதன்கிழமையன்று காலை 8. 30 மணி முதல் 12. 00 மணிவரை சுன்னாகம்மேற்கு டாக்டர் சுப்பிரமணியம் வீதியில் அமைந்துள்ள

அறிஞர் ஐயன்னா சனசமூக நிலையத்தில்
கண்ணாடிகள் வழங்கப்படும்.

ஏற்கனவே பதிவு செய்து கண்பரிசோதனைச் சிட்டை உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

யாழ்ப்பாணத்தில் பிரபல கண்பரிசோதனையாளரும், மூக்குக்கண்ணாடி விற்பனையாளருமாகிய

எரிக் கணேஷ் ஸ்தாபனத்தாரால்

கண்பரிசோதனை நடத்தப்படும்.

ந. அரசரத்தினம்
தலைவர்,
சுன்னாகம் லயன்ஸ் கழகம்.

(சி/12175)

உதயன்

## சுயாட்சி என்றால்...

தமிழ் மக்களுக்குச் சுயாட்சி-தன்னாட்சி - அதிகாரம் வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாக ஜனாதிபதியின் சிறப்புத் தூதுவராக இந்தியா சென்றிருந்த அமைச்சர் லக்ஷ்மன் ஜெயக்கொடி தெரிவித்திருக்கிறார்.

அமைச்சர் குறிப்பிட்டது தமது அரசு இப்போது தயாரித்து வரும் அதிகாரப் பரவலை என்றே கருதவேண்டியுள்ளது. இப்போதுள்ள மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டிருக்கும் அதிகாரங்களை - நிர்வாக அதிகாரங்களை - சற்று விஸ்தரித்து வலுவுள்ளனவாக்க ஏற்பாடு செய்யப்படும் என்பதனையே அவர் கோடி காட்டியுள்ளார் போலும்.

உள்ளகப் பாதுகாப்பு, மாகாண அரசுகளின் உட்கட்டமைப்பு போன்ற விடயங்களில் மட்டுப்படுத்தப்பட்ட அதிகாரங்களை வழங்குவதும் புதிய சேர்க்கையாக அமையும் என ஊகிக்கக் கூடியதாக அமைச்சரின் கூற்று அமைந்துள்ளது.

அரசாங்கம் தயாரித்துவரும் தீர்வுத் திட்டத்தின் இறுதிவடிவம் - உண்மையான வடிவம் - வெள்ளிக்கிழமை வரை சரியாக, விரிவாக, விளக்கமாக வெளியாகவில்லை. அவ்வாறிருக்க சுயாட்சி என்று அமைச்சர் ஜெயக்கொடி குறிப்பிட்டிருப்பதை ஏற்கனவே வரையப்பட்ட அதிகாரப் பரவலை விட விசேடமானதென்றோ பெரும் திருப்பத்தைக் கொண்டு வரவல்ல சிறப்புடையது என்றோ கருதமுடியவில்லை.

சுயாட்சி - தன்னாட்சி - என்பது வெறுமனே நிர்வாக அதிகாரங்களை, சட்ட அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்வதோடு பூர்த்தியாகாது. ஆட்சியைப் பகிர்ந்து கொள்ளவல்ல வகையும் வசதியும் முழுமையாக செய்யப்படவேண்டும். பிராந்திய அல்லது மாநிலம் சம்பந்தப்பட்ட விவகாரங்களில் அந்தந்தச் சபைகளே தீர்மானம் எடுத்து, சட்டம் இயற்றி நிறைவேற்றும் அதிகாரம் இருப்பது இன்றியமையாதது.

அரசாங்கத்தின் தீர்வுத் திட்டம் இத்தகைய சுயமான அரசாட்சிக்கு வகைசெய்யும் விதத்தில் அமைந்திருக்கின்றதா என்பது குறித்து இன்னும் தெளிவான, சரியான தகவல்கள் இல்லை. சுயாட்சி - தன்னாட்சி - உரிமை வழங்கப்படின், அது தங்களைத் தாங்களே ஆட்சி செய்ய வகைசெய்யவேண்டும் என்றே தமிழ் மக்கள் எதிர்பார்க்கிறார்கள். அந்த எதிர்பார்ப்பை அரசின் தீர்வுத் திட்டம் பூர்த்தி செய்யுமா என்பது இனித்தான் தெரியவேண்டும்.

இனப்பிரச்சினைத் தீர்வு யோசனைகள் குறித்து அரசாங்கத்துக்கும் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையில் கடந்த சில மாதங்களாக நடைபெற்று வந்த பேச்சுக்கள், நேற்றுமுன் தினம் வெள்ளியன்று பூர்த்தியாகியதாக அறிவிக்கப்பட்டது. ஆனால் அந்த யோசனையில் உள்ள முக்கியமான அம்சங்கள், இணக்கம் காணப்பட்ட சர்ச்சைக்குரிய அம்சங்கள் பற்றிய விவரங்களோ, விளக்கங்களோ உத்தியோகபூர்வமாக (இப்பத்தி எழுதப்படும் வரை) வெளியிடப்படவில்லை.

அமைச்சர் லக்ஷ்மன் ஜெயக்கொடி இந்தியாவில் பத்திரிகையாளர்களிடம் பிரஸ்தாபித்தது போன்று தமிழருக்குச் சுயாட்சியை - இப்போதுள்ள ஆட்சிக்குப் பதிலாக புதிய ஆட்சிப் பகிர்வை - வழங்குவதற்கு அரசின் தீர்வுத் திட்டம் அமையுமானால் அது வரவேற்கக்கூடிய ஒன்றாக அமையும். பெரும் திருப்பத்தையும் உண்டாக்கும்.

சுயாட்சி என்று அமைச்சர் ஜெயக்கொடி எதனைக் கருதினார் - கூறினார் என்பது விரைவில் தெரிந்துவிடும்!

# உண்மைக்கு குரல் கொடுங்கள்

"துயருறுவோர் பேறு பெற்றோர். ஏனெனில் அவர்கள் ஆறுதல் பெறுவர்" என்ற நம்பிக்கை வார்த்தையை அருளிய இறையேசுவின் வாக்கு இன்று வாழ்வாகப் பலவித சுமைகளுடன் அல்லற்படும் மக்களின் துயர் துடைப்பதில் கவனத் திற் கொள்ளப்படவேண்டும். "இரக்கமுடையோர் பேறு பெற்றோர். ஏனெனில் அவர்கள் இரக்கம் பெறுவர்" என்று தொண்டுள்ளங்களின் பணி வாழ்வுக்கும் நம்பிக்கை ஊட்டி "பேறு பெற்றோர்" என போற்றுகிறார் இறைமகன் கிறிஸ்து.

### ஞாயிறு நற்பிரசாதம்

மக்கள் ஏதிலிகளாக அலையும்போது ஆண்டவன் பெயரால் திருவிழாக்களும் விருந்துகளும் நடத்துவதோடு படாடோப வாழ்விலும் ஈடுபடுவோரையும் துயர் துடைப்பு பணத்தைச் சுரண்டி ஏப்பமிடும் கூட்டத்தினரையும் எம் எதிரே குறைவின்றிக் காண்கின்றோம்.

இல்லமிழந்து உறவுகளைப் பிரிந்து ஏதிலிகளான மக்கள் மனங்களின் சுமை உணராது சுரண்டிச் சுகபோகம் தேடும் கூட்டத்தைக் கண்டு கலங்காதீர். "நீதி நிலைநாட்டும் வேட்கை கொண்டோர் பேறுபெற்றோர். ஏனெனில் அவர்கள் நிறைவு பெறுவர்" என்றுரைத்த இறையேசுவின் வார்த்தைக்கு ஏற்ப, உண்மைக்கு குரல் கொடுப்பதில் உங்களைத் தயார்ப்படுத்துதலை இன்றைய காலத்தின் தேவையாக்கிக் கொள்ளுங்கள்.

உண்மைகள் ஊமையாகும் போது பொய்மைகளே ஆட்சி செய்யும். பொய்மைகள் வளர்வதற்கு தீமைகளைக் கண்டும் காணாதவராக ஒதுங்கி வாழுதலும் குரல் கொடுக்கத் தயங்குதலும் துணைபோகும் செயல்களே. இறை சந்நிதிகளில் மட்டும் நீதிக்கும் சமாதானத்துக்கும் வேண்டுதல் செய்வதுடன் நின்றுவிடாது, வாழ்வில் எதிர்கொள்ளும் கயமைத் தனங்களை களைவதிலும் அதற்காகக் குரல் கொடுப்பதிலும் முன்னிற்க வேண்டும். "நீதியின் பால் பசி தாகம் கொண்டோர் பேறு பெற்றோர். ஏனெனில் அவர்கள் நாட்டை உரிமைச் சொத்தாக்கிக் கொள்வர்" என்ற மலைப்பொழிவின் வார்த்தைக்கு வடிவம் கொடுக்கும் மாநில வாழ்வால் சாட்சி பகருங்கள். இன்றைய தேவைகளில் இதுவும் முக்கியமானதாகும்.

*

# புற்றுநோய்ச் சிகிச்சை நிலைய புனரமைப்புப் பணி ஸ்தம்பிதம்

யாழ்ப்பாணம்,ஜூலை9

தெல்லிப்பளை புற்றுநோய்ச் சிகிச்சை நிலையத்தினை புனரமைப்புச் செய்யும் நடவடிக்கைகள் ஸ்தம்பித நிலையில் இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சிகிச்சை நிலையத்தினை புனரமைப்புச் செய்வதற்குரிய ஆரம்ப வேலைகளுக்கு நிதி ஒதுக்கப்பட்டுப் பல மாதங்களாகியும் வேலைகள் எதுவும் நடைபெறவில்லை.

தெல்லிப்பழை புற்றுநோய்ச் சிகிச்சை நிலையத்தினை மீள இயங்கச் செய்வதன் மூலம் யாழ்ப்பாணத்திலிருந்துகொழும்பு செல்லும் புற்றுநோயாளர்கள் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்தமுடியும் என எதிர்பார்க்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையினால் இந்த நிலையத்தின் புனரமைப்பு வேலைகளைத் தொடர்வதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-5)

# ஜனாதிபதி புலமைப் பரிசிலுக்கு மாணவர் தெரிவு ஆரம்பம்

வலிகாமம்தெற்கு,ஜூலை9

8 ஆம் தரம் தொடக்கம் 11 ஆம் தரம் வரையான விசேட ஜனாதிபதி புலமைப்பரிசில் திட்டத்தின்கீழ் வலிகாமம் கல்வி வலயத்துக்கு ஊடாக விண்ணப்பித்த மாணவர்களுடைய ஆவணங்கள் கோட்டரீதியாக வலய உத்தியோகத்தர்களால் பரிசீலிக்கப்படவுள்ளன.

சண்டிலிப்பாய், சங்கானை கல்விக் கோட்டங்களைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களுடைய ஆவணங்கள் இம்மாதம் 13 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10 மணிக்கு சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் வைத்துப் பரிசீலிக்கப்படும்.

மறுநாள் 14ஆம்திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு உடுவில், தெல்லிப்பழை கல்விக் கோட்டங்களைச் சேர்ந்த மாணவர்களுடைய ஆவணங்கள் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் வைத்துப் பரிசீலிக்கப்படும்.

குறித்த மாணவனுடைய பாடசாலை இணைச்செயற்பாடுகள், குடும்பஅட்டை, உடற்குறைபாடுகள், தாய், தந்தை இருவரும் இல்லையெனின் அதிபர் அல்லது கிராமசேவையாளரால் உறுதிப்படுத்தப்பட்ட கடிதம் என்பன பரிசீலனையின்போது கவனத்தில் கொள்ளப்படவுள்ளன. (ஐ-152)

# மினிபஸ்களுக்கான டீசல் பெறுவதில் பெரும் சிரமம்

வடமராட்சி,ஜூலை8

வடமராட்சியில் இருந்து போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் மினிபஸ்களுக்குத் தேவையான டீசலைப் பெற்றுக் கொள்வதில் பெரும் சிரமங்கள் ஏற்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

புலோலி ப.நோ.கூ. சங்கம், நெல்லியடி - கட்டைவேலி ப.நோ.கூ. சங்கம் ஆகியவற்றின் எரிபொருள் விற்பனை நிலையங்களே இப்பகுதியில் டீசலை விநியோகித்து வருகின்றன.

எனினும் மினிபஸ்கள் டீசலைப் பெற்றுக்கொள்ள முடியாதிருப்பதாக வடமராட்சி சிற்றூர்திச் சேவைச் சங்கம் தெரிவித்துள்ளது.

மினிபஸ்களுக்குத் தேவையான டீசலை சுலபமாகப் பெற்றுக்கொள்வதற்காக பருத்தித்துறை, கரவெட்டி பிரதேச செயலர்களுடன் வடமராட்சி சிற்றூர்திச் சேவைச் சங்கம் தற்போது தொடர்பு கொண்டுள்ளது. (இ-173)

### நாளை

ஆனி 26
திங்கட்கிழமை
*திதி*: நவமி
முற்பகல் 11.37 வரை
*நட்சத்திரம்* : சுவாதி
பின்இரவு 2.13 வரை
*சுபநேரம்* : 11.59 - 1.29
*ராகுகாலம்* : 7.29 - 8.59
இவை பகலுக்கும் இரவுக்கும் பழையநேரப்படி

### உதய வாக்கு

உண்மையை அறிவதற்குச் சாதனம் சிந்தனை. நாம் உண்மையை அறிந்திருந்தால் சிந்திக்க வேண்டிய அவசியம் இல்லை

- *இங்கர்சால்* -

## வாசகர் உள்ளம்

### *இருள்சூழ்ந்த காலம்*

நமஸ்காரம். தூய அன்னை ஸ்ரீசாரதா தேவியின் திருவருள் துணைகொண்டு வாழும் நமக்கு உதயன் மீண்டும் பிரசுரமானது பெரிய ஆறுதல். ஓர் இழந்த குழந்தையை தாய் மீளப்பெற்றால் எப்படி உவகையுடன் இருப்பாளோ, அதே நிலையில் நாம் இருந்தோம். உதயன் பத்திரிகை வெளிவராத காலத்தை இருள் சூழ்ந்த காலமாகவே நாம் கருதுகின்றோம்.

*அன்னையின்*
*ஆசீர்வாதத்துடன*
**சுவாமி சித்ரூபானந்தா**
*பருத்தித்துறை.*

### மக்கள் தவித்தனர்

ஈழ வானிலே
போர் மேகங்கள்
உதயன் வானிலே
தடைமேகங்கள்
முதலையின் வாயில்
மான்போல்
உதயன் வாயில் (கள்)
மேல் 'சீல்'

பயனின்றிப் பல நாள்கள்
நகர்ந்தன
பல செய்தி அறியாமல்
மறைந்தன
நயமின்றி செய்திகள்
புளித்தன
நடப்பதறியாது மக்கள்
தவித்தனர்

உதயனின் மீள்வரவு
கண்டேன்
இதயத்தில் பெரு நிறைவு
கொண்டேன்
துணிச்சல் பெற்ற
விருது கொண்டு
தடைகளை உடைத்து
முன்னேறு!

~ **அபிரா அமல்நிறோச்**
*சண்டிக்குளி.*

### குதூகலம்

நாம் அனுதினம் விரும்பும் ஒரு பொருளைத் தொலைத்து விட்டு, பின்னர் அது திரும்பக் கிடைத்தால் எவ்வளவு குதூகலம் அடைவோமோ அதே அளவு குதூகலம் இன்று (04.07.2000) உதயனைக் கண்டதும் ஏற்பட்டது. வருங்காலத்தில் தடங்கல் எதுவுமின்றித் தொடர்ந்து உதயன் வெளிவர வாழ்த்துக்கள்.

**"செல்வி"**
*மானிப்பாய்.*

## இரு பவுஸர்கள் கப்பலில் வந்தன

'குமண' கப்பலில் வடபிராந்திய பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பாவனைக்கென இரு பவுஸர்கள் கொழும்பிலிருந்து எடுத்துவரப்பட்டுள்ளன.

ஒவ்வொன்றும் 13 ஆயிரத்து 500 லீற்றர் கொள்ளளவுகளைக் கொண்ட இந்த பவுஸர்கள் மூலம் யாழ்ப்பாணத்துக்கான எரிபொருள் விநியோகம் நடைபெறும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஐ-5-10)

### தென்மர் ஆட்சியே! உன்னை மறக்கிலோம்!!

தென்மர் ஆட்சியே!
உன்னை மறக்கிலோம்!
அன்னை போலநீ
அகதிகள் எங்களை
முன்னர் காத்ததை
எண்ணிப் பார்க்கிறோம்!
இன்னல் சூழ்ந்திட
இன்று உற்றநீ
என்ன பாடுகள்
பட்டனை; எண்ணிநாம்
கண்ணில் நீர்எழக்
கலங்கி நிற்கிறோம்!
வண்ண வளங்களும்
வற்றாச் சால்புடை
மண்ணின் மேன்மையும்
மறந்து போவமோ!
விருந்து ஓம்பலும்
வேறு பாடிலா
மருந்து போன்றஉன்
மக்களை மறப்பமோ?
வீடு வாசலும்
விளைந்த நிலங்களும்
தேடு கல்வியில்
திளைத்த கூடமும்
ஊடு வந்துமே
உழுத போரினால்
காடு போலவே
காட்சிக் (கு) உறுத்துதாம்.
வாடும் உங்களில்
வதையால் மடிந்தவர்
கூடுகள் மட்டுமே
குழியில் புதைந்ததாம்
ஆடு மாடுகள்
அனைத்து உடைமைகள்
பாடு சொல்லுதல்
பகர முடியுமோ?
ஒதுங்கி ஒளித்துநீர்
நாட்டம் இன்றியே
நகர்ந்து சென்றதும்
வடமர் ஆட்சியில்
வன்னி வசிப்பினில்
தடமது ஆகவே
தங்கி நிற்கிறீர்.
கைமாறு உமக்குக்
காலம் கடப்பினும்
செய்மா (று) எமக்குத்
தெரியவும் இல்லையே!
நாமும் இங்கேயும்
நாட்களை எண்ணியே
போமுன் பின்னாய் (ப்)
போக்கும் வரவுமாய்
வாடும் முகத்தொடு
வலமிடம் தெரியா (து)
கூடும் உயிரும்
குலுங்கிடப் பிழைக்கிறோம்.
சந்திப் (பு) ஒன்று
சாத்தியம் ஆகிட
வந்திப் போம்நாம்
வல்லவன் இறைவனை
சிந்திப் போம்அவன்
திருவடி தினமும்
சிந்திப் போம்;போர் (ச்)
சீரழி (வு) எல்லாம்
முந்திப் போன
முழுஇழப் (பு) எல்லாம்
தந்தெப் போதுமே
தாங்குவோன் அவனே!

*நயினைக் கவிஞர்*
*நா. க. சண்முகநாதபிள்ளை*

## இடம்பெயர்ந்த மக்களுக்கு
# மிதிவெடி தொடர்பான விழிப்புணர்வு பயிற்சி

யாழ்ப்பாணம்,ஜூலை9

இடம்பெயர்ந்த மக்கள் தங்கியுள்ள நலன்புரி முகாம்களில் மிதிவெடி பற்றிய விழிப்புணர்வு நடவடிக்கைகளை ஐ.நா. அபிவிருத்தி திட்ட மிதிவெடி செயற்பாட்டுக் குழுவினர் மேற்கொண்டு வருகின்றனர்.


தென்மராட்சியிலிருந்து இடம்பெயர்ந்த மக்களில் பலர் வலிகாமம் பகுதியிலுள்ள பாடசாலைகள் மற்றும் பொது இடங்கள் உட்பட கைவிடப்பட்ட கட்டடங்களில் தங்கியுள்ளனர்.

இவர்கள் தங்கியுள்ள இடங்களுக்கு அருகில் உள்ள காணிகளில் மிதிவெடிகள் புதைக்கப்பட்டிருக்கலாம் என்ற அபாயம் இருக்கின்றது.


இந்தப் பகுதிகளில் நடமாட்டத்தை தவிர்க்குமாறு ஆலோசனைகள் வழங்கப்படுவதுடன் மிதிவெடிகள் இருப்பதாகக் கூறப்படும் இடங்களில் மிதிவெடி அபாயம் பற்றிய எச்சரிக்கை அறிவித்தல்களும் போடப்பட்டு வருகின்றன.

ஐ.நா. அபிவிருத்தித் திட்ட புனர்வாழ்வு, புனரமைப்பு திட்டத்தின் கீழ் இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக இத் திட்டத்தின் பொறுப்பதிகாரி தெரிவித்தார். (ஐ-5-10)


# விலங்கு உலகத்தில் பாலின



கஸ்தூரிமான்கள் (MUSK OX) போராட்டத்தில் ஈடுபட்டுள்ளன. ஆண்களின் தலைகள் கவசங்களை (கொம்புகளுக்கிடையே தெரிவது) உடையவ்வை; அதனால் வேகமாக மோதும் போதும் பாதிப்பு ஏற்படுவதில்லை. கஸ்தூரியில் மனிதனுக்கு நாட்டம் இருப்பதனால் இவை பெரிதும் அருகிவிட்டன.



யானை சீல் (ELEPHANT SEAL) ஆண்களிடையே இலிங்க மேலாட்சிக்காகப் போர் நிகழுகின்றது. விலங்கு இராட்சியத்திலேயே இவற்றின் போர் மிகவும் மூர்க்கத்தனமானது; போராட்டத்தின்போது பாரதூரமான காயங்கள் ஏற்படுவதுண்டு.



ஆண் மான் வண்டுகள் (STAG BEETLES) இடையே போராட்டம். எந்தப் பிடிக்கும் விதிவிலக்கில்லை. இங்கு ஒன்று மற்றதை தலைக்கு மேலாகத் தூக்கி வீச முற்படுவதைக் காணலாம்.

## இலிங்கத்தின் ஆரம்பம் (ORIGIN OF SEX)

அங்கிகளின் காதல் லீலைகளைப் பற்றி ஏற்கனவே பல கட்டுரைகள் தந்தும், இது சலிக்காத விடயமல்லவா? அதனால் மேலும் இதைப்பற்றி இங்கு ஆராய்வோம்; இதில் பல ரசமான விடயங்கள் புதைந்திருப்பது புலப்படும்.

சூரியக்குடும்பம் தோன்றி, அதில் ஓர் அங்கமாகிய பூமியில் பல மாற்றங்கள் ஏற்பட, சூழலில் உள்ள சில பொருள்களின் சேர்க்கையினால் முதல் உயிரி தோன்றியது. இதற்கு உதவிய காரணிகளும் அன்று நிலவின. இந்த முதல் உயிரி, வைரசுவைப் போல மிகவும் எளிமையானது. ஆயினும் சுயாதீனமாக வாழக்கூடிய இயல்பையும், பெருக்கமடையக் கூடிய இயல்பையும் கொண்டிருந்தது.

இனப்பெருக்க முறைகளைப் பொறுத்தவரை அநாதியானது *பிளவுமுறை*; ஓர் அங்கி இரண்டாகவோ பலவாகவோ பிளந்து புதிய அங்கிகளைத் தோற்றுவிக்கும். இம்முறையில் பெருக்கமடையும் அங்கிகள் இன்றுமுண்டு. தொடர்ந்து, *வித்திகள* தோற்றுவிக்கப்பட்டு இலிங்கமில்முறை இனப்பெருக்கம் தோன்றியது. இங்ஙனம் தோன்றிய வித்திகள் தேவைக்கு ஏற்ப பாதுகாப்பான போர்வைகளைத் தோற்றுவிப்பதுடன் தகாத காலங்களை உறங்குநிலையில் கழிக்கவும் உதவின. வாழ்க்கைப் போரில் இதுபெரியதொரு முன்னேற்றம். வித்திகள் தோற்றுவிக்கப்படுவது வித்தியாக்கம். இந்நிகழ்ச்சியின்போது சாதரண கலப் பிரிவு நிகழும்; ஆனால் நிறமூர்த்த எண்ணிக்கையில் மாற்றம் ஏற்படுவதில்லை. வித்திகள் அசையக் கூடியவையாகவோ (இயங்கு வித்திகள்), அசைவற்றவையாகவோ இருக்கும்.

தொடர்ந்து, புணரிகள் தோற்றிவிக்கப்பட்டன. ஆரம்பகால புணரிகள் வித்திகளைப் போலவே இருந்தன. ஆயினும் வித்திகள் நேரடியாக முளைத்து புதிய அங்கிகளை தோற்றுவிக்கும். ஆனால் புணரிகள் இரண்டு இணைந்த பின்தான் புதிய அங்கியைத் தோற்றுவிக்கும். புணரிகள் தோற்றுவிக்கப்படுவது புணரியாக்கம் எனப்படும். தோற்றுவிக்கப்படும் புணரிகள் அமைப்பிலும் அளவிலும் ஒத்திருந்தால் ஒத்த புணரிகள் எனவும் அமைப்பில் வேறுபாடு இன்றி அளவில் பெரிதும் சிறிதுமாக இருந்தால் ஒவ்வாப்புணரிகள் எனவும், ஒன்று இயக்கமுள்ளதாகவும் சிறியதாகவும் (விந்து) மற்றது இயக்கமற்றதாகவும் பெரியதாகவும் (முட்டை) இருந்தால் முட்டைப் புணரிகள் எனவும் அழைக்கப்படும். புணரிகள் இணைந்து கருக்கட்டல் நிகழ்வதனால் நிறமூர்த்த எண்ணிக்கை இரட்டிப்பாக வாய்ப்பு உண்டு. இதை நிவர்த்திப்பதற்கு இயற்கையே வழிகோலியுள்ளது. புணரிப் பிறப்பின்போது ஒடுக்கல் பிரிவு நிகழும். அதாவது நிறமூர்த்த எண்ணிக்கை பாதியாகக் குறைக்கப்படும். அதனால் கருக்கட்டலின்போது முழு எண்ணிக்கை மீண்டும் ஏற்படும்; அல்லது நுகம் (கருக்கட்டிய முட்டை) பிரியும்போது ஒடுக்கல்பிரிவு நிகழும்; அதேசமயம் ஒடுக்கல்பிரிவின் போது இயல்புகள் கலபடவும் வாய்ப்பு உண்டு. கூர்ப்பு அடிப்படையில் இது முக்கியமானது.

புணரிகள் இணைவதற்கு அவை ஒன்றை ஒன்று சேரவேண்டும்; அதாவது இனரீதியாகக் கவர்ச்சி இருக்க வேண்டும். இதற்கு புணரிகளால் தோற்றுவிக்கப்படும் சில இரசாயனப் பொருள்கள் உதவும்.

அங்கிகளில் மாறல்கள் ஏற்பட்டால்தான் - அதாவது விகாரங்கள் தோன்றினால்தான் - கூர்ப்பு நிகழமுடியும். கூர்ப்பு நிகழ்வதினால் உயிர்ப் பல்வகைமை ஏற்படும்; அங்கிகள் வாழ்க்கைப் போரில் வெற்றி கண்டு தக்கன பிழைக்கும்; வாழ்க்கைப் போரை வெற்றி காணமுடியாதவை அழிந்துவிடும்.

மாறல்கள் ஏற்படுதற்கு பல மார்க்கங்கள் உண்டு; ஒடுக்கற்பிரிவும் இலிங்கமுறை இனப்பெருக்கமும் இதற்கு ஓரளவு உதவும். பல்மடியமாதல் - அதாவது நிறமூர்த்த எண்ணிக்கை மடங்காக அதிகரித்தல் - இயற்கையில் நிகழ்வதுண்டு. கூர்ப்பு வேகமாக நிகழ இது பெரிதும் உதவும்.

இலிங்கமுறை இனப்பெருக்கம் என்னும் போது ஆண் - பெண் பால்களின் ஆரம்பமும் ஏற்படுவதற்கு வாய்ப்பு உண்டு. சில அங்கி இனங்கள் இருபால் உள்ளவை அல்லது ஓரில்லமுள்ளவை. அதாவது ஆண் - பெண் பால் இரண்டும் ஒரேவீட்டில் இருக்கும்; இனக்கலப்பின் போது இவை ஆண் புணரிகளை பரிமாறிக்கொள்ளும்.

சில அங்கியினங்கள் ஒரு பால் உள்ளவை. அல்லது ஈரில்லமுள்ளவை. அதாவது ஆண் - பெண் பால்கள் வேறு வேறு வீடுகளில் இருக்கும். ஈரில்லமுள்ளவை ஆண் - பெண் என்ற அடிப்படையில் இருக்கும். சிலவற்றில் ஆண் - பெண் அங்கிகளுக்கு இடையே வேறுபாடு இருப்பதில்லை. உதாரணமாக ஆண்,பெண் காகங்களுக்கு இடையே வேறுபாடு எமக்குப் புலப்படுவதில்லை. (காகங்களுக்குத் தெரியும்) சில அங்கிகளில் ஆண் - பெண் இடையே வேறுபாடு உண்டு. இது இலிங்க ஈருரு உடைமை என அழைக்கப்படும். உ-ம்:- கோழி, மயில், மாடு, மனிதன் போன்றவை.

## அங்கிகள் பலவிதம் ஒவ்வொன்றும் ஒருவிதம்

**-குகன்-**

ஒவ்வொரு இன அங்கியும் தன் இனத்தவரை அறிந்து கொள்வதுடன், ஆண் - பெண் ஆகியவையும் ஒன்றையொன்று அறிந்து கொள்ள வேண்டும். அல்லது குளறுபடிதான் ஏற்படும்; இனப்பெருக்கமே நிகழாது போகலாம். இதை நிவர்த்திப்பதற்கு இயற்கை சில நிபந்தனைகளை ஏற்படுத்தியுள்ளது. இதைத்தான் இனக்கவர்ச்சி என்று அழைக்கின்றோம். இனரீதியாக ஒன்றை ஒன்று அறிந்து கொள்வதற்கு மணம், நிறம், ஒலி, அமைப்பு, ஆடல் - பாடல் நடத்தை போன்ற பல அம்சங்களுண்டு. இன ரீதியாக ஒன்றையொன்று உணர்ந்து எங்ஙனமெல்லாம் காதலாடல்களில் ஈடுபடுகின்றன என்பதற்கு சில அங்கிகளை உதாரணமாகக் கொண்டு ஆராய்வோம்.

### போராட்டக் காதல் (வல்லுவனுக்கே வழுவுக்கரசி)

அனேக அங்கிகளில் இனங்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு ஆண்களுடையதே (மனிதர்களும் அப்படித்தான் நினைக்கிறார்கள்!) கொம்புள்ள இனங்களில் பெரும்பாலானவற்றில் ஆண்களே கொம்புள்ளவை; பெண்கள் கொம்புள்ளவையாக இருந்தாலும் அக்கொம்புகள் உறுதியானவையாக இருப்பதில்லை. ஆண்கள் சந்திக்குமிடத்து போர்

மூளும். வெற்றிகண்ட ஆண் ...
பதியாக ...க்கும். இதற்குப் ...
களு ...றுதியானவையாக ...
...னும். எதேச்சையாக...
சூழ்நிலைகள் காரணமாகவும்...
இனக்கலப்புக்களும் நிகழும். ...
றும் எச்சங்கள் நோஞ்சான்களா...
போரில் வெற்றிகாண முடியாத...
கௌவிகளுக்கு எளிதில் அக...
நோய்நொடிக்கு இலகுவில் ...
யாகப் போய் மடிவதுண்டு. ...
விருத்தியை இயற்கைதான் ...
பிடித்தது; நாமும் எமது வள...
ளின் விடயத்தில் அதனைப்...
றோம்.லிய

### பகுதி II

ஆண்களிடையே இயற்கை...
போராட்டம் ஈக்கள், வண்டுக...
போன்ற அங்கிகள் இடைே...
துண்டு.

### அலங்காரத்தை... வெருட்டுதல்...

சில இனமீன்கள்,பறவைக...
போன்றவை தங்கள் அலங்கா...
காட்டி எதிரியை அச்சமுறச் செ...
இயற்றிய ஆணழகன் போட்...

### சந்தர்ப்பத்தை எதி... காத்திருக்கும் ஆ...

கம்பளி சீல்(FUR SEALS)...
யான ஆண்கள் தமக்கென ...
ஏற்படுத்தி, அங்கு பல பெண்க...
கொண்டு காவலிருக்கும்; ...
இனக்கலப்பில் ஈடுபடும். பிற...
தால் துரத்தியடிக்கும்; போரி...
வென்ற ஆணுக்கு தோற்றவரி...
உடைமை ஆகிவிடும். ஆயினு...
ஆண்கள் கடற்கரையில் வரி...
திருக்கும். எவ்வளவு வேளைக்...
யவீர்" கண்துஞ்சாமல் காத்தி...
அவர் சற்று அசதியாக இருக்...
திருந்த ஆண்களில் துணிச்சலா...
பாய்ந்து சென்று அகப்பட்ட ...
கலவியில் ஈடுபட்ட பின் பாய்...
விடும்; 'பெரியவரிடம்' அகப்பட்...
சென்றுவிட வேண்டி நேர்ந்து ...

### தமது பெண்களை... அடைத்து வைத்தி... ஆண்கள்

இவை மனிதப் பிறவிகளின் ...
போலும்! சிக்கிளிட் (CICHLI...
தமது பெண்டிரை சங்கு, நத்...
றின் ஓடுகளில் அடைத்து வை...
புரியும்; இங்ஙனம் அடைபட்டிரு...
- பல (HAREM) - சின்ன...
எல்லாம் ஒரே வீட்டிலிருக்கும்...
மாதிரியை மனிதர்கள் பின்பற்றி...
தான் ஏற்படும்?)

### நிறச் செய்திகளை ... CODED) உடைய ஆ...


சில இனங்களுக்குரிய பல்வி...
RDS) ஆண்கள் நிறச் செய்தி...
யவையாகவிருக்கும். பெண்க...
களை "வாசித்து", ஆண்களை...
ஈடுபடவிடும். ஆண்களின் நிறச் ...




நச்சுப்புத் தவளை (POISON DART FROGS) ஆண்கள் மல்யுத்தப் "போரில்". வென்றவருக்குத்தான் பெண்ணினக்கலப்பில் ஈடுபட உரிமை உண்டு. இந்தத் தவளையின் நஞ்சைத்தான் செவ்விந்தியர்கள் தமது ஊதுகுழல் (BLOW PIPE) எறிபடைக்கு (DART) பூசுவதற்குப் பயன்படுத்துகிறார்கள்.



அலங்கார வெருட்டுக்கு ஓர் உதாரணம். சிவப்புத் தொப்பி மனக்கின் (RED - CAPPED MANAKIN) ஆண் தன் அலங்காரத்தை விளம்பரப்படுத்துகின்றது. இது தனது அலங்காரத்தைக் காட்டியும், அலாதியான கால் அசைவு மூலமும் (FOOT WORK) தனது கெட்டித்தனத்தைக் காட்டி பிற பெண்களை மடக்கப்பார்க்கும். அருகில் இருப்பது பெண்.



கைக்கடக்கமாகச் சிறியதாக இருப்பது பாலுணர்ச்சியைத் தூண்டும் போலும்! மரச்சிலந்தி (WOOD SPIDER) ஆணும் பெண்ணும். பிரமாண்டமானது பெண்; அதைக்காட்டிலும் பல மடங்கு சிறியதாக இருப்பது ஆண். படத்தில் பெண்ணில் மேல் சிறியதாகத் தெரிவது ஆண்.



அடக்கமான ஆணழகர். ஆழ்கட... (DEEP SEA ANGLER FISH) பெ... றில் இரு சிறு ஆண்கள் ஒட்டிக் கொ... இவை இணை பிரிவதில்லை. அதா... பெண்ணும் (பெண்களுக்கும் 'சின்ன... போலும்?)

# லினப்போர்கள்

வெற்றிகண்ட ஆண் மந்தைக்கு அதி ...க்கும். இதற்குப் பிறக்கும் எச்சங் ...றுதியானவையாக இருக்கும்.
...னும். எதேச்சையாகவும், சந்தர்ப்பம் ...லகள் காரணமாகவும், பலதரப்பட்ட ...லப்புக்களும் நிகழும். இங்ஙனம் தோன் ...சங்கள் நோஞ்சான்களாக, வாழ்க்கைப் ... வெற்றிகாண முடியாதவையாக, இரை ...களுக்கு எளிதில் அகப்படுபவையாக, ...நாடிக்கு இலகுவில் இலக்காகுபவை ...போய் மடிவதுண்டு. தேர்வுமுறை இன ...யை இயற்கைதான் முதலில் கண்டு ...து; நாமும் எமது வளர்ப்புப் பிராணிக ...விடயத்தில் அதனைப் பின்பற்றுகின் ...றிய

## பகுதி II

...ர்களிடையே இயற்கைத்தேர்வுக்குரிய ...டம் ஈக்கள், வண்டுகள், தவளைகள் ... அங்கிகள் இடையேயும் நிகழ்வ

### அலங்காரத்தைக்காட்டி வெருட்டுதல்

...இனமீன்கள்,பறவைகள், குரங்குகள் ...வை தங்கள் அலங்கார நிறங்களைக் ...திரியை அச்சுறுத் செய்யும். இயற்கை ...ய ஆணழகன் போட்டி இது.

### ...ந்தர்ப்பத்தை எதிர்பார்த்து காத்திருக்கும் ஆண்கள்


...ளி சீல்(FUR SEALS)களில் பலசாலி ஆண்கள் தமக்கென பிரதேசங்களை ...தி, அங்கு பல பெண்களை வைத்துக் ...டு காவலிருக்கும்; பெண்களுடன் ...லப்பில் ஈடுபடும். பிற ஆண்கள் வந் ...யரத்தியடிக்கும்; போரில் தோற்றால் ... ஆணுக்கு தோற்றவரின் பெண்களும் ...மை ஆகிவிடும். ஆயினும் பல இளம் ...ள் கடற்கரையில் வரிசையாகக் காத் ...ம். எவ்வளவு வேளைக்குத்தான் "பெரி ...கண்துஞ்சாமல் காத்திருக்க முடியும்? ...ற்று அசதியாக இருக்கும்போது, காத் ... ஆண்களில் துணிச்சலான பேர்வழிகள் ... சென்று அகப்பட்ட பெண்களுடன் ...ல் ஈடுபட்ட பின் பாய்ந்து மறைந்து ...பெரியவரிடம்' அகப்பட்டால் பரலோகம் ...விட வேண்டி நேர்ந்து விடுமல்லவா?

### ...மது பெண்களை வீட்டில் ...டைத்து வைத்திருக்கும் ஆண்கள்

...வ மனிதப் பிறவிகளின் முன்னோடிகள் ... சிக்கிளிட் (CICHLID) மீனினங்கள் ...பண்டிரை சங்கு, நத்தைபோன்றவற் ...களில் அடைத்து வைத்துக் காவல் ...இங்ஙனம் அடைபட்டிருப்பது ஒன்றல்ல ...(HAREM) - சின்னவீடு, பெரியவீடு ... ஒரே வீட்டிலிருக்கும் (இந்த முன் ...ப மனிதர்கள் பின்பற்றினால் விபரீதம் ...டுபடும்?)

### ...ச் செய்திகளை (COLOUR ...DED) உடைய ஆண்கள்

...இனங்களுக்குரிய பல்லிகளில் (LIZA- ...ஆண்கள் நிறச் செய்திகளை உடை ...கவிருக்கும். பெண்கள் நிறச்செய்தி ...வாசித்து" ஆண்களைப் புணர்ச்சியில் ...டும். ஆண்களின் நிறச் செய்திகளைச்




...ான ஆணழகர். ஆழ்கடல் தூண்டிலம் மீன் ...A ANGLER FISH) பெண். அதன் வயிற் ... ஆண்கள் ஒட்டிக் கொண்டிருக்கின்றன. ...ன பிரிவதில்லை. அதாவது ஆண்களும் ... (பெண்களுக்கும் 'சின்ன வீடு' உண்டு

செயற்கையாக மறைத்துவிட்டால், அவற்றைப் புணர்ச்சியில் ஈடுபடவிடாது பெண்கள் தடுத்து விடும்.


### பால் மாற்றம் செய்யும் இனங்கள்

தேவைக்கு ஏற்ப ஆண் பெண்ணாகவோ, பெண் ஆணாகவோ மாறக்கூடிய இயல்பு சில இனங்களில் உண்டு. சில இனக்கடற்புழுக்கள், சிப்பிகள், மீன்கள் போன்றவற்றில் இந்த வாய்ப்பு உண்டு. இந்த வாய்ப்பு மனிதனுக்கு இருந்தால் சீதனக் கொடுமை அற்றுப் போய் விடும்.

உதாரணங்களுடன், மேலதிக விளக்கங் களைப் படங்களில் பார்க்க.




காம்புக்கண் ஈ (STALK EYED FLY) இந்த இன ஈக்களில் ஆண்களின் கண்கள் காம்புள்ளவை. இங்கு இரு ஆண்கள் பொருதுகின்றன அதாவது கண் காம்பு நீளம் பார்க்கின்றன. எது நெடிய காம்புகளை உடையதோ அதற்குத்தான் இனங்கலக்கும் உரிமையுண்டு.




பால்மாறிகள் - ராசேமீன்கள் (WRASSE). மேலே உள்ள பெரியது ஆண். ஏனையவை பெண்கள். ஆண் இறக்கும்போது, ஒரு பெண் ஆணாக மாறி, ஆணின் கடமைகளை மேற்கொள்ளும்.




அனிமனி மீன்கள் (ANEMONE FISH). பெரியது பெண்; சிறியது ஆண். ஆணின் தொழில் விந்தைத் தருவது. பெண் இறந்தால், ஆண் பால்மாறி, முட்டைகளை இட ஆரம்பிக்கும்.



சந்தர்ப்பவாத ஆண்கள். கரை நிலத்தில் ஆண்கம் பளி சீல்கள் (FUR SEALS) பிரதேசங்களை ஏற்ப டுத்தித் தமது பெண்களை (HAREM) 'கட்டி மேய்க் கின்றன'. கடற்கரையில் இளந்தாரி ஆண்கள் வரிசை யாக இருந்து நிலைமைகளைக் கண்காணிக்கின்றன. சந்தர்ப்பம் கிடைக்காமலா போகும்?




ஹேரத்தை (HAREM) கூட்டில் அடைத்து வைத்திருக்கும் ஆண் சிக்கிலிட் (MALE SHELL BROODING CICHLID) தனது ஓட்டிற்குக் காவலிருக்கின்றது. உள்ளே பல பெண்களிலிருக்கும். பெண்கள் அளவில் மிகச்சிறியவை. இது மீனினத்தில் கல்தான் போலும்.



நிறச்செய்தியுள்ள ஆண்பல்லி (LIZARD) பெண்ணுடன் இனக்கலப்பில் ஈடுபட்டுள்ளது. இது பக்க மச்சமுள்ள பல்லி (SIDE-BLOTCHED LIZARD) எனவழைக்கப்படும். (*உள்வைப்புக்கள்:-* மூன்று ஆண் பல்லிகளின் தொண்டையிலுள்ள நிறச் செய்திகள்; பாலுணர்ச்சி கூடிய (SUPER SEXED) செம்மஞ்சள் தொண்டையன், பிரதேச ஆட்சிக்குரிய (TERRITORIAL) நீலத் தொண்டையன், மாறும்இயல்புடைய (TRANSVESTITE) மஞ்சள் தொண்டையன்)




எல்க் மான்கள் (ELK DEER) போராட்டத்தில் ஈடுபட்டுள்ளன. தோற்றது பிரதேசத்திலிருந்து விரட்டியடிக்கப்படும்.




மான் கொம்பன் ஈக்கள் (ANTLER FLIES) ஆண்கள் மான் கொம்பு போன்ற வளர்ச்சிகளை உடையவை. இலிங்க மேலாட்சிக்காக இரண்டு ஆண்கள் போராடுகின்றன. கொம்பற்ற பெண்களுடன் கலக்கும் வாய்ப்பு வென்ற ஆணுக்குத்தான் கிடைக்கும்.

## நமக்கு விக்கல் வருவது ஏன்?

விக்கலைப் பற்றிக் கொஞ்சம் விரிவாகச் சொல்லவேண்டும். அப்போது தான் விஷயம் புரியும்! அதாவது நாம் சாதாரணமாக சுவாசிக்கும் போது காற்றை உள் இழுக்கின்றோம் அல்லவா? அப்போது மார்புத் தசைகள் விரிகின்றன. மார்புக்கும் வயிற்றுக்கும் இடையே - சுவாசப் பையின் அடிப்பாகத்தில் இருக்கும் உதர விதானமும் (Diaphragm) பிரிகிறது. உடனே குரல் நாண்கள் (Vocal- cords) திறக்கிறது. மார்புக்குள் காற்றின் அழுத்தம் குறைகின்றது. அதேசமயம் மார்புக்குள் காற்று உட்செல்ல அதிக இடைவெளி கிடைக்கிறது. இதனால் நாம் சுவாசிக்கும் காற்று தங்கு தடையின்றி, திறந்த குரல் நாண்கள் வழியாக சுவாசப் பைக்குள் எளிதாக நுழைந்து விடுகிறது. இது சாதாரணமாக நடக்கும் நிகழ்ச்சி. சில சமயங்களில் உதரவிதானம் சுருங்கி விடுகிறது. குரல் நாண்கள் சரிவரத் திறக்க மறுக்கிறது. இம்மாதிரி சமயங்களில் நாம் சுவாசிக்கும் காற்று குறுகிய இடைவெளி வழியாக சுவாசப் பைக்குள் நுழைய வேண்டியதாகிறது. அப்போது அக்காற்று 'விக்.....' என்ற விநோத ஒலியை எழுப்புகிறது. இதுதான் 'விக்கல்!' (Hiccup) சரி, விக்கல் எப்போதெல்லாம் வரும்? நாம் அவசர அவசரமாக உணவு உட்கொள்ளும் போது விக்கல் வரும்; அளவுக்கு அதிகமாக உட் கொண்டாலும் விக்கல் வரும்; சூடான உணவுகளை உட்கொண்ட பின் நிறையத் தண்ணீர் சாப்பிடாவிட்டாலும் விக்கல் வரும்; சாதாரண விக்கலினால் நமக்கு அதிக தொந்தரவு வராது. அதேசமயம் சிறுநீரகக் கோளாறுகள், கல்லீரல் நோய்கள், மூளைக் காய்ச்சல், முற்றிய நீரிழிவு நோய், குடல் அடைப்பு போன்ற நோய்களில் வரும் விக்கலினால் ஆபத்து வரும்! எனவே, அடிக்கடி விக்கல் வந்தால் மருத்துவரைப் பார்க்க வேண்டியது அவசியம்!

## புத்தகங்களை படிப்பதற்கும், கண்கள் கெடுவதற்கும் தொடர்புண்டு என்கிறார்களே இதை எவ்வாறு தவிர்ப்பது?

குறைந்த வெளிச்சத்தில் புத்தகங்களைப் படிக்கக்கூடாது. நல்ல வெளிச்சமுள்ள இடத்தில் அமர்ந்தே படிக்கவேண்டும். படிக்கும் போது குனியவோ, வளையவோ, பக்கவாட்டில் சாயவோ, கூடாது. நிமிர்ந்து உட்கார்ந்து படிக்கவேண்டும். கண்களுக்கும் படிக்கும் புத்தகத்திற்கும் இடைப்பட்ட தூரம் 30 செ.மீ.தான் இருக்கவேண்டும். புத்தகத்தை சுமார் 45 டிகிரி கோணத்தில் வைத்துக் கொள்ளலாம்! படுக்கையில் படுத்துக் கொண்டே படிப்பதும், ஓடும் வாகனங்களில் பயணம் செய்யும் போது படிப்பதும் கண்களைப் பாதிக்கும்! இரவு நேரங்களில் படிக்கும்போது, விளக்கின் வெளிச்சம் புத்தகத்தில் விழ வேண்டுமேயன்றி, கண்களில் படக்கூடாது. 60 வாட்ஸ் மின் விளக்கு படிப்பதற்குத் தேவையான வெளிச்சத்தைக் கொடுக்கும். அந்த மின் விளக்கு படிக்கும் புத்தகத்திலிருந்து சுமார் 4அடி மேலே, பின்புறத்தில், இடப்பக்கமாக அமைந்திருந்தால் கண்களைப் பாதிக்காது! 40 நிமிடங்கள் தொடர்ந்து படித்தால் அடுத்த 10 நிமிடங்களுக்கு ஓய்வு அவசியம்!

## டாக்டர்கள் தரும் மருந்துச் சீட்டில் "R" என்ற குறியீடு உள்ளதே..... அதன் விளக்கம் என்ன?

'R' எனும் குறியீடு "Recipe' என்ற லத்தீன் வார்த்தையைக் குறிப்பது. அதன் அர்த்தம் 'எடுத்துக் கொள்' (Take) என்பது. அதாவது 'கீழ்க் காணும் மருந்துகளை எடுத்துக் கொள்ள வேண்டும்; சாப்பிட வேண்டும்' என்ற அர்த்தத்தில் மருத்துவர்கள் 'R' குறியீட்டைப் போடுகிறார்கள்.

# தீர்வுக்குத் தடையாகும்

**ஜூன் 25ஆம் திகதிய 'யுக்திய' சிங்கள வார இதழில் வெளியான ஒரு கட்டுரையின் தமிழாக்கம் இது.**

1987இல் அப்போதைய சிறிலங்கா ஜனாதிபதி ஜே.ஆருக்கும் அப்போதைய இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்திக்குமிடையே கைச்சாத்தான இலங்கை - இந்திய சமாதான உடன்படிக்கையின்படி ஜனநாயக நீரோட்டத்தில் கலந்துகொள்ள விருப்பம் தெரிவித்த விடுதலைப்புலிகளை வடக்கு - கிழக்குக்கான இடைக்கால நிர்வாகசபையில் சேர்க்க வேண்டியிருந்தது. அந்த இடைக்கால சபை 11 உறுப்பினர்களைக் கொண்டதாகும். இந்தப் 11 பேரில் 5 உறுப்பினர்கள் விடுதலைப்புலிகள் அமைப்பின் பிரதிநிதிகளாக இருக்கலாம் என ஜே.ஆர். தெரிவித்தார். ஆனால் தமது அமைப்புக்கு ஒதுக்கப்பட்ட

**தமிழில்:- கஜனி**

உறுப்பினர்களின் எண்ணிக்கை போதுமானதல்ல எனவும் குறைந்தது தமது அமைப்புக்கு 7 உறுப்பினர்களாவது தரவேண்டும் என்றும் விடுதலைப் புலிகள் கோரிக்கை விடுத்தனர். அரசும் இதற்கு ஒப்புதலைத் தெரிவிக்கவே விடுதலைப் புலிகள் தரப்பில் 7 உறுப்பினர்களையும் தமிழர் விடுதலைக் கூட்டணி தரப்பில் 2 உறுப்பினர்களையும் ஏனைய தமிழ் அமைப்புக்கள் சார்பில் உறுப்பினர்களையும் கொண்டதாக அந்த இடைக்கால நிர்வாக சபை அமைக்கப்பட்டது.

### உடன்பாடு முறிவு

பின்னர் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன, விடுதலைப்புலிகள் ஏற்கனவே சமர்ப்பித்த திட்டத்திற்கமைய இடைக்கால நிர்வாகசபையின் தலைவர் பதவிக்கு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சி.வீ.கே.சிவஞானம் என்பவரை நியமித்தார். விடுதலைப்புலிகள் இந்த நியமனம் தொடர்பாக உடன்பாட்டைத் தெரிவிக்காததால் தலைவர் பதவி தொடர்பாக இரு தரப்பினருக்கும் இடையே கயிறிழுப்பு ஆரம்பமானது. தலைவராக பத்மநாதன் என்பவரை நியமிக்குமாறு விடுதலைப் புலிகள் கோரினர். விடுதலைப் புலிகளின் கோரிக்கை ஜே.ஆருக்கு திருப்தியை அளிக்கவில்லை. அதைத் தொடர்ந்து ஒருவர் மீது ஒருவர் குற்றஞ் சுமத்த ஆரம்பிக்கவே இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் இடம்பெற்றிருந்த இடைக்கால நிர்வாகசபை செயற்படாது முடங்கிப் போனது.

1987இல் இடம்பெற்ற இந்த முயற்சிகளின் பின்னர் தற்போது இடைக்கால நிர்வாகசபை என்ற விடயம் அரசியல் அரங்கில் முக்கியத்துவம் பெற்றுள்ளது.

சமீபத்தில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இடைக்கால நிர்வாக சபைக்கு விடுதலைப் புலிகளை அனுமதிப்பது தொடர்பாக வெளியிட்ட தகவல்களை அடுத்தே மீண்டும் இதுபற்றிய பேச்சுக்கள் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளன. ஆயுதங்களைக் கைவிட்டு ஜனநாயக நீரோட்டத்தில் கலந்துகொண்டால் மாத்திரமே விடுதலைப் புலிகள் இடைக்கால நிர்வாகசபையில் சேர்த்துக் கொள்ளப்படுவர் என்பதே ஜனாதிபதி வெளியிட்ட தகவலின் அர்த்தமாகும்.

இவ்வாறு அரசியல் நீரோட்டத்தில் கலந்து - ஏதாவது அரசியல் உடன்பாட்டுக்கு விடுதலைப்புலிகள் தயார் என்ற நிலையைத் தவிர ஆயுதமேந்தி இந்த யுத்தத்தை தொடர்ந்து மேற்கொள்ளும் எந்த ஒரு அமைப்புக்கும் முதலமைச்சர் பதவியினாலோ அல்லது இடைக்கால நிர்வாகசபையாலோ எதுவித பயனும் இல்லை என்பதை எந்தவொரு அரசியல் கற்றுக் குட்டியும் அறியும். விடுதலைப் புலிகளையும் சேர்த்து அல்லது சேர்க்காது அமைக்கப்படும் இடைக்கால நிர்வாகசபையையோ அல்லது அரசையோ ஏற்கனவே நிராகரித்த பிரபாகரனுக்கு முதலமைச்சர் பதவியை வழங்கினால் போர் சூழலற்ற - ஜனநாயகச் சூழ்நிலையில் - அந்தப் பதவியை வகிப்பார் எனச் சிந்திப்பது கடினம். இவ்வாறு உருவாக்கப்படாத இடைக்கால நிர்வாகசபையோ அல்லது ஏற்றுக் கொள்ளப்படும் முதலமைச்சர் பதவியோ செயற்பட முடியாத ஒன்றாகவே அமையும்.

### புலிகளை முற்றாக அழிப்பது

அவ்வாறெனில் இந்தப் பேச்சில் ஜனாதிபதி என்னகருத்தைக் கொண்டுள்ளார்? கடைசிப் புலியையும் கொன்றொழித்துவிட்டு அரசுக்கு ஆதரவு வழங்கும் ஏனைய தமிழ் அரசியல் கட்சிகளை ஒன்று சேர்த்து வடக்கு - கிழக்குப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது என ஜனாதிபதி கருதுகிறாரா? அதுவும் இல்லையெனில் விடுதலைப்புலிகள் ஆயுதங்களைக் கைவிடும் அளவுக்கு - எண்ணங்களை மாற்றும் அளவுக்கு - அவர்கள் மீது தீவிரமான தாக்குதல்களை மேற்கொள்வது என்பதா?

# "பல்குழல்" அரசியல்.....

ஜனாதிபதியின் எண்ணங்களுக்கு அப்பால் விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் நேரடியாகவோ அல்லது மூன்றாம் தரப்பின் மத்தியஸ்தத்துடனோ அரசியல் பேச்சுவார்த்தைகள் மூலம் உடன்பாடு காண வாய்ப்புக்கள் இல்லை எனக் கருதுவதாலா?என்பன போன்ற பல கேள்விகள் எழுகின்றன. இது தொடர்பாக ஏனைய தமிழ்க் கட்சிகளினதும் தமிழ்ப் பிரிவினர்களினதும் கருத்துக்களை அறிந்துகொள்வது மிகவும் முக்கியமானதாகும். இது இவர்கள் பெரும்பான்மையான தமிழ் மக்களின் எண்ணங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறார்கள் என்பதாலோ அல்லது மூடி மறைப்பார்கள் என்பதாலோ அல்ல. இருப்பினும் இதில் முக்கிய இடத்தை விடுதலைப் புலிகளே பெறுகின்றார்கள் என்பது வெளிப்படை. எவ்வாறாயினும் இந்த நாட்டிலுள்ள ஏனைய தமிழ்க் கட்சிகள் தமிழ் மக்களின் ஒரு பகுதியினரைப் பிரதிநிதித்துவப் படுத்துகிறார்கள். எனவேதான் அவர்களின் கருத்துக்களும் அறியப்பட வேண்டியது முக்கியமாக உள்ளது. அரசுக்கு ஒத்துழைப்பை வழங்கும் டக்ளஸ் தேவானந்தாவின் தலைமையிலான ஈ.பி.டி.பி. அமைப்பும் ஈ.பி.ஆர்.எல்.எப். அமைப்பின் வரதராஜப் பெருமாள் பிரிவும் அரசாங்கம் கொண்டுள்ள கருத்தையே கொண்டுள்ளன. அதாவது ஜனநாயக நீரோட்டத்தில் கலக்காதவரை இடைக்கால நிர்வாகசபையில் கலந்துகொள்ள விடுதலைப்புலிகளுக்கு வாய்ப்பளிப்பதில்லை என்பதாகும்.

### தமிழ் கட்சிகளின் கருத்து

அரசுக்கு ஆதரவு வழங்கும் மற்றொரு தமிழ்க் கட்சியான புளொட் அமைப்பு, விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளாமல் - விடுதலைப் புலிகளின் கருத்துக்களை அறியாமல் - இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்வது அர்த்தமற்றதாகும் எனத் தெரிவித்துள்ளது. 'ரெலோ' அமைப்பும் தொடர்ந்தும் குறிப்பிடத்தக்களவு தமிழ் மக்களின் ஆதரவைக் கொண்டுள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியும் வடபகுதியில் யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருக்கும் போது யுத்தத்தில் சம்பந்தப்பட்டுள்ள தரப்பினருக்கு பிரதிநிதித்துவத்தை வழங்காது - ஆகக் குறைந்தது அவர்களின் கருத்துக்களைக் கேட்டறியாது - இவற்றை நடைமுறைப் படுத்த முற்படுவது நியாயமற்றது மாத்திரமல்ல நடைமுறைச் சாத்தியமற்றதாகும் என்று கூறியுள்ளன.

### அரசின் புதிய நிலைப்பாடு

இதன்படி விடுதலைப் புலிகள் தவிர்ந்த ஏனைய தமிழ்க் கட்சிகள் என்ன கூறுகின்றன என்பதை விளங்கிக்கொள்ள வேறு விளக்கம் தேவையில்லை. ஆனால் அரசின் அரசியல் நிலைப்பாடு குறித்தே கேள்வி எழுகின்றது. ஜனாதிபதியின் கருத்தின்படி விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கைவிட்டு வரும்வரை இடைக்கால நிர்வாகம் தொடர்பாக விடுதலைப் புலிகளின் கருத்துக்களை அறிவது கூட முக்கியமற்றது என்பதாகும். நிலைமை இதுவேயாயின், இது மிகவும் பயங்கரமானது மாத்திரமல்ல துர்ப்பாக்கியமானதும் ஆகும். ஏனெனில் 1987இல் ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் ஆட்சியின் போது முதன்முதலாக இடைக்கால நிர்வாக சபையை உருவாக்க முயற்சித்த போது விடுதலைப்புலிகள், தங்களுக்கு நம்பிக்கையான ஒருவரை அச்சபையின் தலைவராக நியமிக்காத காரணத்தால் அந்த இடைக்கால நிர்வாகசபை நிறுவும் முயற்சிகள் தோல்வியடைந்த பின்னர் மேற்கொள்ளப்படும் இந்த மு[illegible]ற்சியானது பிரச்சினையின் ஒரு ப[illegible]தியைக் கைவிட்டு மீண்டும் மு[illegible]களை ஆரம்பிக்க முயலும் செயலாகும்.

தற்போதைய அரசின் ஆட்சிக் காலத்தில் இப்போதுதான் முதன் முதலில் இடைக்கால நிர்வாகசபை பற்றிய எண்ணம் உருவானது. தற்போதைய அரசு தீர்வுச் செயற்பாடுகள் குறித்து பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டதே தவிர இதற்கு முன்னர் இடைக்கால நிர்வாகசபை குறித்து முயற்சிகள்எதனையும் மேற்கொள்ளவில்லை. அவ்வாறெனில் அன்று (1987இல்) இடைக்கால நிர்வாகசபையை உருவாக்க ஒப்புதலைத் தெரிவித்த விடுதலைப் புலிகளின் கருத்தை இன்று இந்த அரசு அறிவதற்குக் கூட முயற்சி எடுக்காதது ஏன்? என்ற சந்தேகம் எவருக்கும் உருவாகுவதுஇயல்பே. ஆனால் ஜனாதிபதியின் இந்த மனநிலைக்கான காரணம் 'பல்குழல்' ஆயுதத்தின் ஆற்றலாகவும் இருக்கலாம். தாக்குதலின் போது இந்த ஆயுதம் ஆற்றல்மிக்கதாக இருக்கக்கூடும். ஆனால் தீர்வினைத் தேடும் முயற்சிகளின் போது அந்த ஆயுதம் அர்த்தமற்றது என்பதை ஏற்றுக்கொள்ள ஜனாதிபதி விரும்பவில்லை. எவ்வாறாயினும் ஜனாதிபதியின் கருத்திலிருந்து வெளியாகும் அரசியல்நிலைப்பாடானது தீர்வுச் செயற்பாடுகள் தொடர்பாக கருத்துக்களை அறிய முன்வராத - வெறுப்புக்களைப் போஷிக்கும் - அரசியலாகும். ஜனாதிபதியின் இந்தக் கருத்தானது ஆனையிறவுத் தாக்குதலுக்கு முன்னர் அன்ரன் பாலசிங்கம் 'தமிழ் கார்டியன்' இதழுக்கு அளித்த பேட்டியிலும் பார்க்க பேச்சுவார்த்தை (உடன்பாடு) விவரங்களை மூடி மறைப்பது போல் தோன்றுகின்றது.

★

---

# வெளியிடங்களுக்கு பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டோர் விவரம்

யாழ்ப்பாணம்,ஜூலை7

யாழ். குடாநாட்டில் இருந்து வெளியிடங்களுக்குப் பயணம் செய்ய பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் உதயனில் வெளியாகி வருவது தெரிந்ததே.

பயண அனுமதி வழங்கப்பட்டவர்களின் (இம்மாதம் 7ஆம் திகதி வரை) பதிவு இலக்கங்கள் பிரதேச செயலர் ரீதியாக வருமாறு:-

**யாழ்ப்பாணம்**

(126534ஏ),(126534பி), (126534சி), (138908ஏ), (144159ஏ), (144159பி), (144159சி), (144159டி), (144159ஈ), (144312ஏ), (144312பி), (144315ஏ), (144315பி), (144350ஏ), (144350பி), (144350சி), (144350டி), (144350ஈ), (144377ஏ), (144377பி), (144392ஏ), (144392பி), (144403ஏ), (144403பி), (144403சி), (144412ஏ), (144412பி), (144412சி), (144420ஏ), (144420பி), (144420சி), (144420டி), (144433ஏ), (144434ஏ), (144449ஏ), (144452ஏ), (144468ஏ), (144468பி), (144468சி), (144561ஏ), (144561பி), (144561சி), (147879ஏ), (147879பி), (147978ஏ), (148001ஏ), (148001பி), (148045ஏ), (148045பி), (148045சி), (148163ஏ), (148163பி), (148163சி), (148189ஏ), (148189பி), (148216ஏ), (148221ஏ), (152762ஏ), (152762பி), (152762சி), (152762டி).

**நல்லூர்**

(142771ஏ),(142771பி), (144304ஏ), (144304பி), (144304சி), (143974ஏ), (143974பி), (144173ஏ), (144173பி), (147244ஏ), (147265ஏ), (147265பி), (147265சி), (152506ஏ).

**சண்டிலிப்பாய்**

(142085ஏ), (142085பி), (142866ஏ), (142903ஏ), (143937ஏ), (143957ஏ), (143957பி), (143959ஏ), (143973ஏ), (143973பி), (143973சி), (143975ஏ), (143975பி), (144062ஏ), (144093ஏ), (144098ஏ), (144098பி), (144167ஏ), (144167பி), (148242ஏ), (148256ஏ).

**தெல்லிப்பழை**

(143814ஏ), (143815ஏ), (143815பி), (144102ஏ).

**உடுவில்**

(135980ஏ), (143871ஏ), (143960ஏ), (143966ஏ), (143966பி), (143966சி), (144227ஏ), (152502ஏ), (152502பி), (152502சி).

(ஜ-க)

---

தீவுப்பகுதி போக்குவரத்துக்கென

# 75 லட்சம் ரூபா செலவில் புதிய படகு விரைவில் கொள்வனவு

வேலணை,ஜூலை9

குறிகாட்டுவானுக்கும் ஏனைய தீவுகளுக்கும் இடையில் பயணிகள் போக்குவரத்துக்கு ஈடுபடுத்துவதற்கென புதிய மோட்டார்ப் படகு ஒன்று கொள்வனவு செய்யப்படவுள்ளதாக வேலணைப் பிரதேச சபைத்தலைவர் ந.கருணாகரமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இப்படகுக் கொள்வனவுக்கென வடமாகாண மீள்குடியேற்ற புனர்வாழ்வு அதிகார சபையினால் 75 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியினாலேயே இந் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக பிரதேச சபைத் தலைவர் மேலும் தெரிவித்தார்.

(ஜ-167)

---

## பாதாள உலக உறுப்பினர்கள் கைது

கொழும்பு,ஜூலை9

பாதாள உலகக் குழுவைச் சேர்ந்தவர்கள் எனக் கருதப்படும் இருவரைக் கொழும்பு குற்றத்தடுப்புப்பிரிவு தலைமையகப் பொலீஸார் கைது செய்துள்ளனர்.

பாதாள உலகக் குழுத் தலைவர்கள் வசித்து வந்ததாகக் கூறப்படும் மகரகமவில் உள்ள வீடு ஒன்றினை நேற்று முன்தினம் முற்றுகையிட்ட பொலீஸார் இரகசிய வழியாகத் தப்பிச் செல்ல முயன்ற இருவரையும் கைது செய்தனர் என குற்றத் தடுப்புப் பிரிவுத் தலைமைய சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் பந்துல விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை -

இந்த வீட்டிலிருந்த மூன்று பெண்களையும் வேறு ஒருவரையும் கைது செய்து விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக பந்துல விக்கிரமசிங்க மேலும் தெரிவித்தார் (க-9)

## புலி உறுப்பினர்கள் இருவர் மரணம்

வவுனியா,ஜூலை9

இருவேறு சம்பவங்களில் தமது தரப்பில் இரு புலி உறுப்பினர்கள் உயிரிழந்துள்ளதாகப் புலிகளின் குரல் வானொலி அறிவித்துள்ளது.

கடந்த 3ஆம் திகதி கடலில் இடம்பெற்ற விபத்து ஒன்றின் போது கடற்கரும்புலி கப்டன் ஜெயாஞ்சலி (இராமையா இந்திராதேவி - யாழ்ப்பாணம்) என்பவரும்-

கடந்த முதலாம் திகதி எதிர்பாராத தாக்குதலின் போது காயமடைந்த கலைவாணி - (சிவஞானம் ஸ்ரீகரிதா - நெடுங்கேணி) என்பவரும் உயிரிழந்துள்ளனர். (க-9)

## மருந்து தட்டுப்பாடு

மந்திரிகை அரசினர் வைத்தியசாலையில் நீரிழிவு நோய்க்கான மருந்து வகைகளுக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

பிரதி சனி தோறும் நீரிழிவு சிகிச்சைக்காக வரும் இந்நோயாளர்களுக்கு சிகிச்சையின் பின்னர் தனியார் கடைகளில் உரிய மருந்து வகைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு சிட்டை வழங்கப்படுகிறது.

(ஜ-173)

---

# சுகாதாரப் பரிசோதகர் பற்றாக்குறை நீங்கியது

வடமராட்சி,ஜூலை9

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் சுகாதாரப் பரிசோதகர்களுக்கு இருந்து வந்த பற்றாக்குறை கடந்த மாதப் பிற்பகுதியில் இருந்து நீக்கப்பட்டுள்ளது.

12 சுகாதாரப் பரிசோதகர்கள் கடமையாற்ற வேண்டிய இப்பிரிவில் வெற்றிடமாக இருந்துவந்த மூன்று சுகாதாரப் பரிசோதகர்கள் பதவிகள் நிரப்பப்பட்டுள்ளன.

இப்பதவிகளுக்கு மட்டக்களப்பிலுள்ள சுகாதாரப்பரிசோதகர் பயிற்சி நிலையத்தில் பயிற்சியை முடித்துக் கொண்ட எம்.சதீஸ், என். நிர்மலானந்தன், பி.யோகராசா ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். இம் மூவரும் முறையே பருத்தித்துறை, தொண்டமனாறு, வல்வெட்டித்துறை ஆகிய பகுதிகளில் சேவை புரியுமாறு பணிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை இப்பிரிவில் குடும்பநல சேவையாளர்களுக்கு தொடர்ந்தும் பற்றாக்குறை இருந்து வருகிறது. (இ-173)

---

# இணையத்தின் அறிக்கைக்கு செயலக கூட்டத்தில் விசனம்

யாழ்ப்பாணம்,ஜூலை9

யாழ். மாவட்டத்தில் நிவாரண விநியோகம் திருப்திகரமாக நடைபெறவில்லை என்று யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தினால் வெளியிடப்பட்ட ஜூன் மாத நிலைவர அறிக்கைக்கு யாழ். செயலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற உணவு, எரிபொருள் விநியோகக் கூட்டத்தில் கண்டனமும் ஆட்சேபனையும் தெரிவிக்கப்பட்டது.

நிவாரண விநியோகத்துக்கு வழங்கப்பட்ட அரிசி எந்தப்ப. நோ.கூ. சங்கத்தினாலும் மாற்றப்படவில்லை என்றும் - இது தொடர்பாக ப.நோ. கூ.சங்கங்கள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை வன்மையாகக் கண்டிப்பதாகவும் ப.நோ.கூ. சங்கங்களின் சார்பில் யாழ். ப.நோ.கூ. சங்கத் தலைவர் சீ.வீ.கே சிவஞானம் தெரிவித்தார்.

இடம்பெயர்ந்தவர்களுக்கு வழங்கப்படும் நிவாரணம் அவர்களுக்கு போதாமலிருப்பதாக அரசசார்பற்ற நிறுவனம் குற்றம் சாட்டியுள்ளது. நிவாரண விநியோகம் ஒரு திட்டத்தின் கீழ் நடைபெறுவதால் இதற்கு மேல் நிவாரணப்பொருள்கள் வழங்க முடியாது என இந்தக் கூட்டத்துக்குத் தலைமை வகித்த அரசாங்க அதிபர் க.சண்முகநாதன் கூறினார்.

"இடம்பெயர்ந்தவர்கள் பலருக்கு நிவாரணம் வழங்கப்படவில்லை என்று குறை சொல்கிறார்கள். நிவாரணம் பெறாதவர்களின் பெயர்ப்பட்டியல்களை அவர்களினால் சமர்ப்பிக்க முடியுமா?" என்று அரசாங்க அதிபர் கேட்டார்.

அவர் மேலும் பேசுகையில் மே மாதம் 10ஆம் திகதிக்குப் பின் ஊரடங்கு நேரத்தில் நாங்கள் குறைந்தளவு ஊழியர்களுடன் எமது பணிகளைச் செய்துள்ளோம். மே 24ஆம் திகதிக்குப் பின்னர் செயலகத்துக்கு குறிப்பிடத்தக்க ஊழியர்கள் சமுகம் தந்தார்கள்.

இன்றையசூழலில் எத்தனையோ பிரச்சினைகளுக்கு மத்தியில் நாம் கடமையாற்றுகின்றோம். எம்மீது குறை கூறுபவர்கள் இடம்பெயர்ந்த மக்களுக்கு என்ன உதவி செய்தார்கள்?

கண்ணாடி வீட்டிலிருந்து கல்லெறிய வேண்டாம் என்று கேட்டுக் கொள்கின்றேன் - என்றார். (இ-5)

# செய்திக் கொத்து

## 'போரூட்' உதவி

குருநகர், ஜூலை 9

மானிப்பாய் மகளிர் கல்லூரி இடம்பெயர்ந்தோர் முகாமில் உள்ள சிறுவர்கள் கல்வி கற்பதற்காக 'போரூட்' நிறுவனம் 20 ஆயிரம் ரூபா செலவில் மண்டபம் ஒன்றை அமைத்துக் கொடுத்துள்ளது.

இங்கு 3 வயது தொடக்கம் 5 வயதுக்குட்பட்ட சுமார் அறுபது சிறுவர்கள் தமது ஆரம்பக் கல்வியைக் கற்று வருகிறார்கள்.

இவர்களுக்கான கல்வியைப் போதிக்கும் மூன்று ஆசிரியர்களுக்கான கொடுப்பனவையும் இந்த நிறுவனமே வழங்கவுள்ளது. (க-51)

## அலுவலகம் இடம் மாற்றம்

சுழிபுரம், ஜூலை 9

யாழ்ப்பாணத்தில் இயங்கி வந்த பட்டினிக்கெதிரான நிறுவனத்தின் அலுவலகம் தற்காலிகமாகச் சித்தன்கேணிச் சந்திக்கு அருகில் உள்ள மின்சாரசபை அலுவலகத்திற்கு அண்மையில் இயங்குகின்றது. (க-28)

## 24 மணிநேரமும் தண்ணீர் வழங்கஏற்பாடு

வடமராட்சி, ஜூலை 9

மந்திகைஅரசினா ஆதார வைத்தியசாலையில் 24 மணி நேரமும் தண்ணீர் வழங்குவதற்கான நடவடிக்கைகளை பிரான்ஸ் வைத்தியக்குழு விடுத்துள்ளது.

இதற்கென சக்தி வாய்ந்த நீரிறைக்கும் இயந்திரம் ஒன்றை பிரான்ஸ் வைத்தியக் குழு கொள்வனவு செய்துள்ளது.

இந்த இயந்திரம் பொருத்தப்பட்டதும் 24 மணி நேரமும் குழாய் மூலம் தண்ணீர் வழங்கப்படவுள்ளது. (க-173)

## சைக்கிள் திருட்டு

நெல்லியடி, ஜூலை 9

ஆலய பூஜையில் கலந்து கொள்ளச் சென்றவரின் 3 ஆயிரம் ரூபா பெறுமதியான சைக்கிள் பட்டப்பகல் வேளையில் திருடப்பட்டுள்ளது.

இச் சம்பவம் நேற்றுமுன்தினம் பிற்பகல் 3 மணியளவில் தும்பளை சக்தி கோயில் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

நுணாவில் மத்தி சாவகச்சேரியிலிருந்து இடம்பெயர்ந்து புலோலி தெற்கு காரந்தோட்டம் என்ற இடத்தில் வசித்துவரும் முருகேசு தர்மலிங்கம் (வயது 41) என்பவரது சைக்கிளே திருடப்பட்டுள்ளது. (ஐ-109)

## வகுப்புகள் நடைபெறுகின்றன

கொழும்புத்துறை ஜூலை 9

கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயம் தற்போது யாழ். வண்ணார்பண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் இயங்குகின்றது என வித்தியாலய அதிபர் திருமதி எஸ். சிவபாலன் தெரிவித்துள்ளார்.

காலையில் வகுப்புக்கள் நடைபெற்று வருவதாகவும், அப் பாடசாலை மாணவர்களை அங்கு சமுகம் தருமாறும் அதிபர் கேட்டுள்ளார். (ஐ-30)

## களஞ்சியத்துக்கான அடிக்கல் நடப்பட்டது

கொழும்புத்துறை ஜூலை9

கோண்டாவிலில் அமைக்கப்படவிருக்கும் புனர்வாழ்வுக்களஞ்சிய கட்டடத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை சம்பிரதாய பூர்வமாக நடைபெற்றது. (க-30)

## கட்டட வேலைகள் பூர்த்தி

யாழ்ப்பாணம், ஜூலை 9

சண்டிலிப்பாய் பாரதி சனசமூக நிலையத்துக்கான கட்டட வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன. வலி. தென்மேற்கு பிரதேச சபையின் உதவியுடன் இக்கட்டடம் அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க)

## தபாலகம் இயங்குகிறது

யாழ்ப்பாணம், ஜூலை 9

கொழும்புத்துறை உப அஞ்சலகம் தற்பொழுது இல. 189, கொழும்புத்துறை வீதியில் இயங்குகின்றது.

இதேவேளை —

ஜூன் மாதத்துக்கான பொதுசன உதவிப்பணம் தற்பொழுது அங்கு வழங்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (க-30)

## யாழ். செயலர் பிரிவில் 9,789 குடும்பங்கள் இடம்பெயர்வு

யாழ்ப்பாணம், ஜூலை 9

யாழ். பிரதேச செயலர் பிரிவிலிருந்து 9 ஆயிரத்து 789 குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளதாக பிரதேச செயலக புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

இடம்பெயர்ந்தவர்களில் பலர் நல்லூர், சண்டிலிப்பாய், கரவெட்டி, பருத்தித்துறை, ஊர்காவற்றுறைப் பகுதிகளில் தஞ்சமடைந்துள்ளனர்.

தற்பொழுது 3 ஆயிரத்து 801 குடும்பங்கள் மட்டும் யாழ். பிரதேச செயலர் பிரிவில் வசித்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. [ஐ-5]

## மண்எண்ணெய்

வண்ணார்பண்ணை ஐயனார் கோவிலடியில் உள்ள தனியார் எரிபொருள் நிலையத்தில் பங்கீட்டு அட்டை வைத்திருக்கும் ஜே—88, ஜே—97, ஜே—98, ஜே—99, ஜே—100 ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களுக்கு நேற்று சனி முதல் இரண்டு லீற்றர் மண் எண்ணெய் வழங்கப்பட்டுவருகின்றது. (இ-100)

## 550 குடும்பங்கள் சுதுமலையில்

குடாநாட்டில் அண்மையில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையையடுத்துஇடம்பெயர்ந்த மக்களில் சுமார் 550 குடும்பங்களைச் சேர்ந்த மக்கள் சுதுமலை தெற்கு கிராம அலுவலர் பிரிவில் தங்கியுள்ளனர்.

பாடசாலைகளிலும், உறவினர் வீடுகளிலும் தங்கியுள்ள இவர்களுக்கு பல தொண்டு நிறுவனங்கள் அடிப்படை வசதிகளை வழங்கி வருகின்றன. (இ-10)

# திரிபோஷா மா எடுத்துவருவதற்கான கப்பல் கட்டணத்துக்கு நிதி இல்லை

யாழ்ப்பாணம், ஜூலை 9

கப்பல் கட்டணம் செலுத்துவதற்கான நிதி ஒதுக்கீடு கிடைக்காமையினால் கொழும்பிலிருந்து திரிபோஷா மாவினை யாழ்ப்பாணத்திற்கு எடுத்துவர முடியாமலிருப்பதாக சுகாதார சேவைகள் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ்ப்பாணத்துக்கு ஒரு மாதத்துக்குத் தேவையான திரிபோஷாவினை கப்பலில் கொண்டு வருவதற்கு 4 லட்சத்து 50 ஆயிரம் ரூபா கட்டணமாகச் செலுத்த வேண்டியுள்ளது

இக் கட்டணத்தை செலுத்துவதற்குரிய ஏற்பாடுகள் இல்லாமையால் யாழ்ப்பாணத்துக்குரிய திரிபோஷாவினை எடுத்துவர முடியாமலுள்ளது.

வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் குழந்தைகளுக்கு போஷாக்கு உணவாக திரிபோஷா வழங்கப்பட்டு வந்தது தெரிந்ததே.

இதேவேளை—

தென் பகுதியில் இந்த திரிபோஷா வழங்கும் திட்டம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

1995 ஆம் ஆண்டிற்கும் பின்னர் ஒரு தடவை மட்டுமே திரிபோஷா மா யாழ். மாவட்டத்தில் வழங்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-5)

## ஒன்று கூடல்

யாழ்ப்பாணம், ஜூலை 9

யாழ். பல்கலைக் கழக கலைப்பீட இறுதி வருட 'பி. பிரிவு மாணவர்களுக்கான ஒன்று கூடல் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் இரண்டு மணிக்கு மாணவர் பொது மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (க)

## ஓய்வூதிய வவுச்சர்கள் அனுப்பி வைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 9

யாழ்ப்பாணப் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த ஓய்வூதியர்களின் ஜூலை மாதத்துக்குரிய ஓய்வூதிய வவுச்சர்கள் தபாலில் அனுப்பப்பட்டிருப்பதாக பிரதேச செயலர் பா. செந்தில்நந்தனன் அறிவித்துள்ளார். (க)

## பதிவாளர் வெற்றிடம்

யாழ்ப்பாணம், ஜூலை 9

யாழ். உயர்தொழில்நுட்ப நிறுவனத்தின் பதிவாளர் பதவிக்கான வெற்றிடம் இன்னும் நிரப்பப்படாமலே உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம் 7 ஆம் திகதி கொழும்பில் நடைபெற்ற நேர்முகப் பரீட்சையில் கலந்து கொள்வதற்கு போக்குவரத்துத் தடையினால் யாழ்ப்பாணத்தில் இருந்து எவரும் செல்லாதமையாலும் கொழும்பில் இருந்து இங்கு வந்து பணியாற்ற எவரும் முன்வராமையாலுமே வெற்றிடம் நிரப்பப்படவில்லை என்று அதன் இயக்குநர் தெரிவித்தார்.

இதனால் சுமுகமாக இயங்குகின்ற இந்த நிறுவனத்தின் பணிகள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (இ-10)

## இராணுவ ஆஸ்பத்திரிக்கு நிதி உதவி

கொழும்பு, ஜூலை 9

கொழும்பு இராணுவ வைத்தியசாலையில் அமைக்கப்பட்டு வரும் புதிய சத்திர சிகிச்சை நிலையத்துக்கு வயம்ப வடிகால் நிறுவனம் மூன்று லட்சம் ரூபாவை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

இந்த நிறுவனத்தின் முகாமையாளர் அன்ரனி குறூஸ் அமைச்சர் ரட்ணசிறி விக்கிரம நாயக்கவிடம் நேற்று முன்தினம் இந்த நிதியை வழங்கினார். (க-9)

## சுன்னாகம், மருதனார்மடம் சந்தைகளில் தரகர் தொல்லை!

யாழ்ப்பாணம், ஜூலை 9

சுன்னாகம், மருதனார்மடம் சந்தைகளில் தரகர்களின் தொல்லையால் விவசாயிகள் பாதிக்கப்படுவதாக யாழ். அரச அதிபரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி சந்தைகளுக்கு தமது உற்பத்திப்பொருள்களை சந்தைப்படுத்தும் விவசாயிகளின் பொருள்களுக்கு தரகு வேலைகளில் ஈடுபடும் இவர்கள் பொருள்களுக்கு குறைந்த விலை பேசுவதுடன் தரகுக் கட்டணத்துடன் ஒவ்வொருகிலோ உற்பத்திப் பொருளும் வாங்குகின்றனராம்.

தரகர்களின்றி பொருள்களை சந்தைப்படுத்தும் விவசாயிகள் தரகர்களின் மிரட்டல்களுக்கும் அச்சுறுத்தல்களுக்கும் உள்ளாகின்றனர் என்றும் சொல்லப்படுகிறது

தரகர்களின் தொல்லை தொடர்பாக வலிமேற்கு பிரதேச சபைத் தலைவரிடம் முறையிட்ட போதும் உரிய நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை என்று விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

யாழ். மாவட்டத்தின் பிரபல்யமான இந்தச்சந்தைகளிலிருந்து சட்ட விரோதமாகச் செயற்படும் தரகர்களின் தொல்லைக்கு முடிவு கட்டப்படவேண்டும் என்று அரச அதிபரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (இ-5)

## சண்டிலிப்பாய் செயலகப் பிரிவுக்கு இடம்பெயர்ந்துள்ளோரின் பங்கீட்டு அட்டைகள் மீளாய்வு

வலிகாமம் தெற்கு, ஜூலை 9

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் தற்போது தங்கி இருக்கும் இடம்பெயர்ந்த மக்களுக்கு அடுத்த கட்ட நிவாரணம் வழங்குவதற்காக அவர்களது பங்கீட்டு அட்டைகள் மீளாய்வு செய்யும் பணிகள் சம்பந்தப்பட்ட கிராம அலுவலர்களால் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சில்லாலை, மாதகல், பெரியவிளான், மாரீசன்கூடல், இளவாலை கிராம சேவையாளர் பிரிவுகளில் தங்கியுள்ள பளை, மருதங்கேணி, சாவகச்சேரி, நல்லூர், யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களில் இருந்து இடம்பெயர்ந்த மக்களின் பங்கீட்டு அட்டை மீளாய்வுகள் நாளை திங்கட்கிழமை நடைபெறஉள்ளன.

பங்கீட்டு அட்டை இல்லாத மருதங்கேணி, சாவகச்சேரி, பளைப்பிரிவு மக்கள் தகுந்த ஆதாரம் காட்டி தமது பங்கீட்டு அட்டையினைப் பெறப் பிரதேச செயலருடன் தொடர்பு கொள்ளுமாறும்—

பங்கீட்டு அட்டைகளை மீளாய்வு செய்யத்தவறுவோர் அடுத்த கட்ட நிவாரணத்தைப் பெற முடியாது போய்விடும் என்றும் —

செயலக நிர்வாக அலுவலர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை —

சுதுமலை, சாவற்காடு, ஆனைக்கோட்டை, நவாலி, மானிப்பாய் மற்றும் சண்டிலிப்பாய் கிராம சேவையாளர் பிரிவுகளில் மீளாய்வு வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன. (க-152)

## நலன்புரி நிலையங்களில் ஈக்கள் பெருக்கம்

வலிகாமம் தெற்கு, ஜூலை 9

வலிகாமம் தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேசத்தில் உள்ள நலன்புரி நிலையங்களில் ஈக்களின் தொல்லை அதிகரித்துள்ளது.

ஈக்களின் தொல்லை அதிகரிப்பினால் அப்பகுதியில் இடம்பெயர்ந்து வாழும் மக்களிடையே தொற்றுநோய்கள், வயிற்றோட்டம் என்பன பரவும் ஆபத்து ஏற்பட்டுள்ளன.

மானிப்பாய் இந்துக் கல்லூரி, மானிப்பாய் மகளிர் கல்லூரி போன்ற பாடசாலைகளில் இடம்பெயர்ந்தோர் நெருக்கமாக வாழ்வதாலும், சுகாதாரம் பேணப்படாமையாலும் 15 பேருக்கு வயிற்றோட்டம் ஏற்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது.

முகாம்களில் தங்கியுள்ள மக்களில் அநேகர் மலசல கூடங்களைப் பயன்படுத்தாமல் மலசல கூடத்துக்கு வெளியே உள்ள தரையில் மலசலம் கழிப்பதே நோய்கள் பரவ காரணமாவதாக சுகாதாரப் பகுதியினர் தெரிவிக்கின்றனர்.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு இக்குடும்பங்களின் நன்மை கருதி மலசலகூட வசதிகளையும், குடிதண்ணீர் வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

சுமார் நூறு மலசல கூடங்கள் இப்பகுதியில் தற்காலிகமாக அமைக்கப்பட்டுள்ளன. குடிதண்ணீருக்கும் கிணறுகளுக்கும் குளோறின் இடப்பட்டும் உள்ளது.

மலசலகூடங்கள் உரிய முறையில் துப்புரவு செய்யப்படாமல் இருப்பதும் —

மலசலகூடக் கழிவுகள் உடனுக்குடன் அகற்றப்படாமல் குழிகளில் தேங்கி நிற்பதும் நோய்கள் பரவக்காரணமாக அமைகின்றன எனவும்

சுகாதாரப் பகுதியினர் தெரிவிக்கின்றனர். (ஐ-152)

## ஆங்கில தினப் போட்டிகள்

சங்கானைக் கல்விக் கோட்ட பாடசாலைகளுக்கு இடையிலான ஆங்கிலதினப் போட்டிகள் நாளை திங்கட்கிழமையும் மறுதினம் செவ்வாய்க்கிழமையும் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளன. (ச-28)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

நில அளவுக்குப் பயன்படுத்தப்படும் 'அளவு கோல்' அலுமினியத்தால் ஆனதும் 5 M நீளமுடையதுமான 3 சுருக்குகளால் சுருக்கக் கூடியதும் 2 இஞ்சி அகலமும் கொண்ட மேற்படி பொருள் மருதனார்மடச் சந்திக்கும் உரும்பிராய்ச் சந்திக்கும் இடையில் காலை 9. 30 மணிக்கும் 10. 30 மணிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொலைபேசி இல. 2203 எனும் எண்ணுடன் உடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். (76295)

## தொலைந்து விட்டது

இல. — 500 – 6080 MD – 50 — 1804700 E - 180470 ஹொண்டா மோட்டார்சைக்கிள் ஆடி மாதம் 1ஆம் திகதி இரவு உடுவில் வீதி, மானிப்பாயிலுள்ள வீட்டில் காணாமல் போய் விட்டது. கண்டவர்கள் சி. உமாகாந்தன், உயர் தொழில்நுட்பக் கல்லூரி, கொக்குவில் எனும் விலாசத்திற்கு அறியத் தரவும். சன்மானம் வழங்கப்படும். (76287)

## A/L பௌதிகவியல்

பௌதிகவியல், இணைந்த கணிதம் பல வருடமாகக் கற்பித்து வரும் ஆசிரியரினால் சிறப்பாக முழுத் திட்டமும் பயிற்சிகளோடு குறுகிய காலத்தில் முடித்துக் கொடுக்கப்படும். தனிப்பட்ட முறையிலும் வகுப்புகள் நடைபெறுகின்றன. தொடர்பு: 3 மணிக்குப் பின்பு R. பாலசுப்பிரமணியம் B.Sc. (Cey) Dip in Ed, 17/1 பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (76296)

## MATHS, ENGLISH

O/L பரீட்சையில் Distinction, Credit பெறுபேறடைய ஆரம்பத்திலிருந்து Paper Class வரை (ஆண்டு 9, 10உட்பட) கற்பிக்கப்படும். ஆசிரியர், 85, சிவன்கோயிலடி, (சிவன் கோயில் பின்புறம்) திருநெல்வேலி. (76229)

## விற்பனைக்கு

ரேடியோ, T. V டெக், அவண், கிறைண்டர், உழுந்து அரைக்கும் மிசின் (7Kl) மணிக்கூடு, FAN, கட்டில், கதிரை, மேசை, எவர்சில்வர் பொருள்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: அபிராமி, இல. 212, இராமநாதன் வீதி, (பல்கலைக்கழகம் முன்பாக.) (76300)

## மணமகள் தேவை

லண்டனில் வசிக்கும் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 28 வயது இளைஞனுக்கு மணமகள் தேவை. அண்மையில் எடுக்கப்பட்ட புகைப்படத்துடன் தொடர்பு கொள்ளவும். விள. இல. 1058 மே/பா உதயன். (76315)

## படகுக் கட்டணம் அதிகரிப்பு

நெடுந்தீவு, ஜூலை 9 . நயினாதீவு — குறிகாட்டுவான் படகுச்சேவைக்கான கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

சுமார் ஒருமைல் வரையான இடத்தூரத்திற்கு புங்குடுதீவு —நயினா தீவு பல.நோ.கூ. சங்கத்தினர் பயணி ஒருவருக்கு ரூபாவும் தனியார் படகு உரிமையாளர்கள் பயணி ஒருவருக்கு 15 ரூபாவும் அறவிடுகின்றனர். (ஐ-111)

---

# பட்டதாரிப் பிரிவு
## யாழ்ப்பாணக் கல்லூரி,
### வட்டுக்கோட்டை.

B. A. இறுதி ஆண்டு (பேராதனை)
இக்கற்கை நெறிக்கான விரிவுரைகள் 10-07-2000 அன்று ஆரம்பமாக உள்ளன.

விவரங்களுக்கு:
**பதிவாளர்**
**யாழ்ப்பாணக்கல்லூரி, வட்டுக்கோட்டை.**
(76297)

---

# கூட்ட அறிவித்தல்

யாழ். உயர் தொழில் நுட்ப நிறுவன மாணவர் ஒன்றியத்தினால் புதிய நிர்வாக சபையிடம் (2000/2001) நிர்வாகத்தைக் கையளித்தல் விடயம் தொடர்பாக எதிர்வரும் **திங்கட்கிழமை 10-07-2000 மதியம் 1.00 மணியளவில்** நிறுவன கேட்போர் கூடத்தில் நடைபெறும். இதில் பழைய, புதிய நிர்வாக சபையினர் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

நன்றி!

செயலாளர்.

**உயர் தொழில் நுட்பம்,**
**மாணவர் ஒன்றியம்.** (76290)

---

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் அதிபர்
செல்வி சி. கெங்கரமலர்தேவி
அவர்களின் அன்புச் சகோதரன்

## சின்னையா நடராசா

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**ஆசிரியர்கள், மாணவர்கள்**
**யா/மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம்.**

---

# ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

## திருமதி கணேசலிங்கம் கமலாதேவி

பிறப்பு: 04-12-1949
இறப்பு: 09-07-1995

அன்புக்கு இலக்கணமாய் அறிவுக்கு மந்திரியாய்
குடும்பத்துக்கு அகல்விளக்காய் குன்றென
நின்றிருந்தாய்!
மலையே நீ சாய்ந்தாய் அம்மா! எம்
மனங்களும் வீழ்ந்ததம்மா! நீ இருந்த
இடம் நிரப்ப யாரால் முடியும் அம்மா?

உங்கள் பிரிவால் துயருறும்
**குடும்பத்தினர்.**

நவாலி கிழக்கு,
மானிப்பாய். (76211)

---

# 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
20 — 05 — 1950



மறைவு
09 — 07 — 1995

## கமலநாதன் சாவித்திரி (பேபி)

அம்மா, அன்புத் தெய்வமே! உங்கள் மடியில் தவழ்ந்து 5 ஆண்டுகள் போயின. தினமும் உங்கள் நினைவுடன் வாழ்ந்துகொண்டிருக்கின்றோம். அம்மா! உங்களின் உங்களுடன் சேர்ந்து இறைவனடி சேர்ந்த அத்தை கனி (க. கமலாதேவி) பெரியப்பா இராசு (வை. ஜெயசிங்கம்) ஆகியோரினதும் ஆத்மா சாந்தியடைய இறைவனைக் கண்ணீர்ப் பூக்களால் துதிக்கின்றோம்.

**அன்புக் கணவன், பிள்ளைகள்,**
**சகோதரர், உறவினர்.**

நவாலி கிழக்கு, மானிப்பாய். (76194)

---

# பொதுமக்கள் கவனத்துக்கு

**10 - 07 - 2000 திங்கட்கிழமை தொடக்கம்**
**350 கிராம் பாணின் விலை = 7.50 சதம்**

பாணின் விலை, நிறை, தரம் ஆகியவற்றில் குறைபாடுகள் இருப்பின் நேரடியாகவோ அல்லது கடிதம் மூலமாகவோ தலைமைச் செயலகத்துக்கு தெரியப்படுத்தவும்.

**அங்கத்தவர்களுக்கு மட்டும்:-**
இடம்பெயர்ந்த சகல அங்கத்தவர்களும் உடனடியாக தலைமைச் செயலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**நிர்வாகம்.**
**யாழ். மாவட்ட பேக்கரி**
**உரிமையாளர் சங்கம்.**

தற்காலிக முகவரி:
''லக்சுமி வாசா''
குளப்பிட்டி றோட்,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில். (சி/12169)

---

# மரண அறிவித்தல்கள்

## கிருஷ்ணன் வடிவேலு

கொக்குவிலைப் பிறப்பிடமாவும் ஆரியகுளத்தை வசிப்பிடமாகவும் தற்போது வவுனியாவை இருப்பிடமாகவும் கொண்ட கிருஷ்ணன்-வடிவேலு அவர்கள் 04-07-2000 அன்று இறைபதம் அடைந்தார்.

இவர் காலஞ்சென்ற கிருஷ்ணன் – செல்லம்மா அவர்களின் அன்பு மகனும் ஞானேந்திரா, நாகேஸ்வரியின் அன்புச் சகோதரனும் கமலாவின் அன்புக் கணவரும் சுதனின் (சுவிஸ்) அன்புத் தந்தையும் முருகேசு, செல்லையா, கனகரத்தினம், ஞானேஸ்வரி (கனடா), நாகராசா, மகேஸ்வரி, தர்மலிங்கம், பூபாலு ஆகியோரின் அன்பு அண்ணனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 09-07-2000இன்று ஞாயிற்றுக்கிழமை வவுனியாவில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**பூபாலு, தர்மலிங்கம்,**
**நாகராசா, மகேஸ்வரி.**

வளாக வீதி,
கொக்குவில், கிழக்கு. (76307)

## மகேஸ்வரி குமாரசாமி

கொக்குவில் மேற்கு கேணியடி ஒழுங்கையைச் சேர்ந்த மகேஸ்வரி குமாரசாமி 8 - 7 – 2000 திகதியன்று இறைபதம் எய்தியுள்ளார்.

அன்னார் காலஞ் சென்ற சின்னப்பு குமாரசாமியின் அன்பு மனைவியும், சிவலிங்கம், மாதவநாயகி, ஏழிசைநாயகி (கனடா), செந்தில்ராசா (பிரான்ஸ்), சபேசராசா (கனடா), ஸ்ரீரங்கநாயகி (பிரான்ஸ்), செல்வநாயகி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், கனகரத்தினம், காலஞ்சென்ற சண்முகலிங்கம் மற்றும் கலியுகவரதன் (பிரான்ஸ்), கண்ணன் (தனுஸ்ரூடியோ), விக்கினேஸ்வரன் (கனடா), கிருபானந்தபாலினி, தனலட்சுமி (பிரான்ஸ்), நாகதேவி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் மயூரன், சிந்துஜன், ஜெயபிரசாத், தனுசன், லாவண்யா, குபேரன், வியாசன், அபினயா, ஆரணியா, ஆசணன், ஆதித்தன், கீர்த்தன், நிவேதன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 9-7-2000 காலை 9. 00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனத்திற்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மருமகன் - **கண்ணன்**

தனுஸ்ரூடியோ,
கொக்குவில். (76309)

## இராசதுரை அன்னம்மா

பாண்டியந்தாழ்வைப் பிறப்பிடமாகவும் தற்போது சில்லாலையை வசிப்பிடமாகவும் கொண்ட இராசதுரை அன்னம்மா (08—07—2000) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அன்ரனி இராசதுரையின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை சிசிலியா, கிறிஸ்தோப்பர் மேரி ஆகியோரின் சகோதரியும், மரியமலரின் (இந்திரா) அன்புத் தாயாரும் மரியதாஸின் (ஆசிரியர், சென். சார்ஸ் மகா வித்தியாலயம்) மாமியாரும், அருட்சகோதரி எத்தல் வீவாவின் (H. C. அதிபர், அச்சுவேலி சென். திரேசா மகாவித்தியாலயம்) பெரியம்மாவும், யூட்அருள்ராஜ் (ஹொலண்ட்) அமலறாஜினி, றோசானி, கிறிஸ்ரினா (மாணவர், யாழ். திருக்குடும்பக் கன்னியர்மடம் ஆங்கிலம்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (09—07—2000) காலை 10 மணிக்கு யாழ். கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**ம. மரியமலர் (இந்திரா)**
(மகள்)

183, சில்லாலை றோட்,
சில்லாலை. (76308)

# தற்போதைய தேர்தல் விதிப்படியே பொதுத் தேர்தல் நடத்தப்படும்

## அமைச்சர் பட்டி வீரக்கோன் தெரிவிப்பு

கொழும்பு,ஜுலை9

எதிர்வரும் பொதுத்தேர்தல் தற்போது நடைமுறையில் உள்ள தேர்தல் விதிமுறைகளுக்கு அமையவே நடத்தப்படும் என அமைச்சர் பட்டி வீரக்கோன் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற பொது வைபவம் ஒன்றில் உரையாற்றிய போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

புதிய அரசமைப்புத் திட்ட யோசனையின் கீழ் பொதுத் தேர்தலை நடத்துவதானால் பல்வேறு அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டியுள்ளது.

இதன் முதற்கட்டமாக உத்தேச அரசமைப்பு இந்தமாதத்துக்குள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுவிடும். பின்னர் அது மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் அங்கு அங்கீகரிக்கப்பட்டதும் மக்கள் கருத்துக் கணிப்புக்காக முன்வைக்கப்படும். அதன் பின்னர்தான் புதிய அரசமைப்பு நடைமுறைச் சட்டமாக்கப்படும்.

இவ்வாறு அமைச்சர் வீரக்கோன் மேலும் தெரிவித்தார். (ஐ-7)

# இடம்பெயர்ந்தோரின் சுகாதாரம் பேண நடவடிக்கை வேண்டும்

## சண்டிலிப்பாய் பிரதேச செயலர் தெரிவிப்பு

வலிகாமம் தெற்கு,ஜுலை9

இடம்பெயர்ந்து வந்து இப்பிரதேசத்தில் தங்கி உள்ள மக்களின் சுகாதார வசதி முக்கியமான பிரச்சினை ஆகும். ஆகவே நாம் எல்லோரும் ஒன்றுபட்டு சுகாதாரம் பேண சேவையாற்ற வேண்டும்.

வலிகாமம் தென்மேற்கு - சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவின் பிரதேச நலன்பேண் நிலையங்களின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்துக்குத் தலைமை வகித்து உரையாற்றிய சண்டிலிப்பாய் பிரதேச செயலர் ஆ.மகாலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

சண்டிலிப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் அகதிகளுக்கான ஐ.நா.தூதரகம், செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு, யூனிசெவ் நிறுவனம் போன்றவற்றின் பிரதிநிதிகளும், பல தொண்டர் நிறுவனங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

சண்டிலிப்பாய் பிரதேசத்தில் இடம்பெயர்ந்து வந்து தங்கியுள்ள 26ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்களின் உணவு விநியோகம், குடிதண்ணீர் பிரச்சினைகள் மற்றும் மலசலகூட சுகாதாரம் பற்றிய அடிப்படை வசதிகள் , இருப்பிடவசதிகள் பற்றி மேற்படி கூட்டத்தின் போது கலந்துதுரையாடப்பட்டது.

பிரதேச செயலர் மேலும் பேசுகையில் இப்பிரதேசத்தில் கடமையாற்றும் கிராம சேவையாளர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் பிரதேச சபை அலுவலர்கள் மற்றும் ஏனைய திணைக்களங்களைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் ஆகியோர் ஒன்றாக இணைந்து இன்றைய கஷ்டகால கட்டத்தில் செயற்படவேண்டும். உள்ளூராட்சி அதிகாரிகளும் பிரதேச செயலாளரும் இணைப்பாளராக இருந்து அவர்களை வழிப்படுத்த வேண்டும் - என்றார்.

இடம்பெயர்ந்த மக்களுக்கு தேவையான இருப்பிட வசதிகளும், சுகாதாரவசதிகளும் குடிதண்ணீர் வசதிகளும் செய்து கொடுக்கப்பட வேண்டும் எனவும் இடம்பெயர்ந்த பாடசாலைப் பிள்ளைகளுக்கு உதவிக் கல்விப் பணிப்பாளரின் உதவியுடன் இருநேரப் பாடசாலை நடத்த வசதிகள் செய்ய வேண்டும் எனவும் அவர் தனது உரையின் போது வலியுறுத்தினார். (இ-152)

### மாணவர் கவனத்துக்கு

யாழ்ப்பாணம்,ஜுலை9

இந்த ஆண்டு டிசெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ சாதாரண தரப்பரீட்சைக்குத் தோற்றவுள்ள யாழ்ப்பாணம் கொட்டடி நமசிவாய வித்தியாலய மாணவர்களை எதிர்வரும் 12ஆம் திகதி புதன்கிழமைக்கு முன் பாடசாலைக்கு சமுகமளிக்குமாறு அதிபர் கேட்டுள்ளார்.

* * * * * *

சரசாலை ஸ்ரீ கணேச வித்தியாலயத்தில் ஜி.சீ.ஈ சாதாரணதரத்தில் கல்வி பயிலும் மாணவர்களை பரீட்சை விண்ணப்பப் பத்திரத்தில் கையொப்பமிடுதற்காக பின்வரும் திகதிகளில் சமுகமளிக்குமாறு அதிபர் கேட்டுள்ளார்.

இடம்யெர்ந்து வடமராட்சியில் வசிப்போர் நாளை திங்கட்கிழமை முற்பகல் 9 மணிக்கும் 12 மணிக்கும் இடையில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திலும் - இடம்பெயர்ந்து வலிகாமத்தில் வசிப்போர் நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 9-12 மணிக்கு இடையில் மருதனார்மடம் கல்விக்கோட்டத்திலும் சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஐ)

### பனம் கள் விலை அதிகரிப்பு

சண்டிலிப்பாய்,ஜுலை9

யாழ். மாவட்டத்திலுள்ள பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கள்ளுத் தவறணைகளில் பனம் கள்ளின் விலை எதிர்வரும் 11ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தொடக்கம் இரண்டு ரூபாவினால் அதிகரிக்கப்படவுள்ளது.

தற்போது 10ரூபாவாக விற்கப்படும் ஒரு போத்தல் பனம் கள்ளின் விலை 11ஆம் திகதி முதல் 12 ரூபாவாக இருக்கும்.

பனம் கள்ளின் உற்பத்தி குறைந்து வருவதால் ஏற்பட்ட தட்டுப்பாடு காரணமாக இந்த விலை அதிகரிப்புச் செய்யப்படுவதாக சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-135)


## பாராட்டுகின்றோம்

*திருநெல்வேலி வீநாயகர் சிற்பாலய பிரதம ஸ்தபதியும்*
*திருநெல்வேலி ஸ்ரீ பத்திரகாளி அம்மன் கோவில்*
*புதிய தேரின் நிர்மாணக்குழுவின் தலைவருமான*

**சிற்பஜோதி**
**சுப்பிரமணியம் இராசரத்தினம்**

**அவர்களுக்கு இன்றைய தினம் இலங்கை அரசின் கலாசார அமைச்சினால் "கலாபூஷணம்" விருது வழங்கப்படுவதை யொட்டி அன்னாருக்கு எமது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவிப்பதில் மகிழ்வடைகின்றோம்.**

தேர்த்திருப்பணிச் சபையினர்,
ஸ்ரீ பத்திரகாளி அம்மன் கோவில்,
திருநெல்வேலி.

(76313)



விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## வாழ்த்துகின்றேன்

யாழ்/திருநெல்வேலி
விஸ்வப் பிரம்மஸ்ரீ
**சு. இராசரத்தினம் ஆச்சாரியார்**
அவர்களுக்கு
**சிற்பத்திற்கான கலாபூஷணவிருது**

**இன்று (09-07-00) ஞாயிற்றுக்கிழமை வழங்கி கௌரவிக்கப்படுவதையிட்டு பெரு மகிழ்ச்சி அடைகின்றோம்.**

அன்னார் பல சிறப்பும் பெற்று பல்லாண்டு காலம் சீருடன் வாழ எல்லாம் வல்ல தலங்காவல் நாயகனையும், தாய் காளி பரமேஸ்வரியையும் வேண்டிப் பிரார்திக்கின்றேன்.

*நாவலடி ஒழுங்கை,*
*திருநெல்வேலி மேற்கு,*
*யாழ்ப்பாணம்.*

**விஸ்வப் பிரம்மச் செல்வன்**
**இ. சிவனேசன்**

(76301)



**உங்கள் கண்களை சரியாகப் பரிசோதித்து**
**கண்ணாடிகளைப் பெற்றுக்கொள்ள**
**நீங்கள் நாடவேண்டிய இடம்**

## ☆ றெனிமுக்குக் கண்ணாடி அகம் ☆

*இல. 540,*
*ஆஸ்பத்திரி வீதி,*
*யாழ்ப்பாணம்.*

*இல. 288,*
*நாவலர் வீதி,*
*ஆனைப்பந்தி,*
*யாழ்ப்பாணம்.*

(C/12177)


# மாவைக் கந்தன் உற்சவத்தை முன்னிட்டு விசேட பஸ்சேவை

மாவிட்டபுரம் கந்தசாமி கோயில், வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு யாழ்.பஸ்நிலையத்திலிருந்து தினமும் காலை 8.00 மணிக்கு மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் வரை வடபிராந்திய போக்குவரத்துச் சபையினால் பஸ்சேவை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மேற்படி ஆலயத்தின் பூசைகள் முடிந்த பின்னர் மாலை 2.45 மணிக்கும் மாவிட்டபுரத்திலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி ஒரு பஸ்சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அடியார்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் பட்சத்தில் மேலதிக பஸ் சேவைகள் நடத்தப்படும் என்றும் வடபிராந்திய போக்குவரத்துச்சபை பொதுமுகாமையாளர் வி.எஸ். சொக்கலிங்கம் தெரிவித்தார்.

இதேவேளை தென்மராட்சி மக்களின் நன்மை கருதி கொடிகாமத்தில் ஒரு பஸ்ஸை இரவில் தங்க வைத்து தினமும் காலை 6.30 மணிக்கும் பகல் 12மணிக்கும் கொடிகாமத்திலிருந்து நெல்லியடி ஊடாக யாழ்ப்பாணம் நோக்கி நாளை திங்கள் தொடக்கம் இரு சேவைகள் நடத்தப்படும் என்றும் அவர் கூறினார்.

இந்த பஸ்களில் ஒன்று காலை 9.15 மணிக்கும் மற்றது பகல் 3.15 மணிக்கும் யாழ். பஸ் நிலையத்திலிருந்து நெல்லியடி ஊடாக கொடிகாமம் வரை நடத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

சுழிபுரம் கிழக்கிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு ஒரு பஸ் சேவையும் மல்லாகத்திலிருந்து காரைநகர் நோக்கி மற்றொரு பஸ் சேவையும் உடனடியாக ஆரம்பிக்கப்படவுள்ளது என்றும் -

பருத்தித்துறையிலிருந்து நெல்லியடி, புத்தூர், புன்னாலைக்கட்டுவன் பலாலி வீதிவழியாக காலை 6.45 மணிக்கு யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்படும் பஸ் நாளை திங்கள் தொடக்கம் காலை 8.30மணிக்கு யாழ். பஸ் நிலையத்திலிருந்து மேற்படி பாதை ஊடாக மீண்டும் பருத்தித்துறைக்கு செல்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார். (இ-5)

# தாராளமாக மா விநியோகம்

யாழ்ப்பாணம்,ஜுலை9

இதுவரை மட்டுப்படுத்தப்பட்ட அளவில் விநியோகம் செய்யப்பட்டு வந்த கோதுமை மாவை ப.நோ.கூ சங்கங்கள் மற்றும் தனியார் கடைகளில் தாராளமாகப் பெறமுடிகிறது.

கடந்த வாரம் ஆளுக்கு ஒரு கிலோ மா வீதம் ப.நோ.கூ. சங்கங்கள் விநியோகம் செய்து வந்தன.

தற்பொழுது. பங்கீட்டு அட்டை இன்றி ப.நோ.கூ. சங்கத்தில் கோதுமை மாவைப் பெறக் கூடியதாக இருக்கிறது.

மாவின் விலை கிலோவுக்கு மூன்று ரூபாவினால் குறைக்கப்பட்டதுடன் யாழ்ப்பாணத்தில் புதிய விலை நாளை திங்கட்கிழமை தொடக்கம் அமுலுக்கு வரவுள்ளது.

# றோட்டறக்ட் கழகம் நடத்தும் பரீட்சை முன்னோடிக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஜுலை9

இம்மாத இறுதியில் நடைபெறவிருக்கும் ஜீ.சி.ஈ உயர்தரப் பரீட்சையில் தோற்றவுள்ள கணித, விஞ்ஞான மாணவர்களுக்கான பரீட்சை முன்னோடிக் கருத்தரங்கு ஒன்றினை யாழ். நகர்மைய றோட்டறக்ட் கழகம் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் நடத்தி வருகிறது.

நேற்று ஆரம்பமான இந்தக் கருத்தரங்கில் நூற்றுக்கணக்கான மாணவர்கள் குடாநாட்டின் பல பகுதிகளில் இருந்தும் வந்து கலந்து கொண்டனர். இதன்போது இலவசமாக கையேடுகள் மாணவர்களுக்கு வழங்கப்பட்டன.

இந்தக் கருத்தரங்கில் இன்று காலை 8.30 மணிக்கு இரசாயனவியலும் பிற்பகல் 12.30 மணிக்கு பேராசிரியர் வி.கே.கணேசலிங்கம் வழங்கும் 'பரீட்சையை அணுகுதல்' எனும் பொருளிலான கருத்துரை விஞ்ஞான மாணவர்களுக்கும் தொடர்ந்து பிற்பகல் ஒரு மணிக்கு விலங்கியல் மற்றும் தூயகணிதம் தொடர்பான கருத்தரங்கும் இடம்பெறவுள்ளன.

# கலாசார மண்டபம் நெடுந்தீவில் அமைப்பு

யாழ்ப்பாணம்,ஜுலை9

நெடுந்தீவில் கலாசார மண்டபம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

வடமாகாண மீள்குடியமர்வு, புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகார சபை இந்த மண்டபத்துக்கு என இருபது லட்சம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளதாக நெடுந்தீவு பிரதேச சபைத்தலைவர் புலவர் ஏ.டபிள்யூ. அரியநாயகம் தெரிவித்தார்.

'டக்ளஸ் தேவானந்தா' கலாசார மண்டபம் எனப் பெயரிடப்படவுள்ள இந்த மண்டபத்துக்கான அத்திவாரக்கல் நடும் வைபவம் எதிர்வரும் 24ஆம் திகதி நடைபெறவுள்ளது.

ஈ.பி.டி.பியைச் சேர்ந்த பிரதேச சபைத் தலைவர்கள் மற்றும் அக்கட்சியின் முக்கிய பிரமுகர்கள் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி.வி.கிருஷ்ணசாமி ஆகியோர் இந்த அத்திவாரக்கல் நடும் நிகழ்வில் கலந்து கொள்வர். (ஐ-7-111)

### நிவாரணம்

பளை, கொடிகாமம், சாவகச்சேரி, கைதடி ஆகிய இடங்களில் அமைந்த ப.நோ.கூ.சங்கங்களின் எல்லைக்குள் இருந்து இடம்பெயர்ந்து கோப்பாய்ப் பிரதேச செயலர் பிரிவில் தங்கியுள்ளவர்களுக்கு 2ஆம் கட்ட நிவாரணம் எதிர்வரும் புதன்கிழமை தொடக்கம் வழங்கப்படவுள்ளது.


## வாழ்த்துகின்றோம்

**யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் ஆசிரியராக, பகுதித்தலைவராக, தற்காலிக அதிபராக, உதவி அதிபராக, 1999ஆம் ஆண்டு வரை பணியாற்றி தற்போது யாழ். கல்வி வலய உதவிக்கல்விப் பணிப்பாளராகவும் யாழ்.இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கப் பொருளாளராகவும் பணியாற்றும்**

**யாழ். இந்துவின் பழைய மாணவன்**
**திரு. என். உலகநாதன் அவர்கள்**

**இன்று தனது கல்விப்பணியில் 25ஆவது ஆண்டில் அடியெடுத்து வைக்கின்றார். அவர் பணி மேலும் சிறக்க வாழ்த்துகின்றோம்.**

*யாழ்ப்பாணம்.*

***இந்துவின் நண்பர்கள்.***

(C/12187)



## உடன் அறியத் தரவும்

இலந்தைக்குளம் வீதி, அரியாலையைச் சேர்ந்த பூபாலசிங்கம் யசோவதி குடும்பத்தை, சி.சோதி, சுப்பிரமணியம் கொம்பனி 34, ஆடியபாத வீதி, நல்லூர் மற்றும் ச. பாலகிருஷ்ணன் (பால்மாமா) புதுச்செம்மணி வீதி, நல்லூர் என்போர் தேடுகின்றனர். தகவல் அறிந்தோர் மேற்படி இரு முகவரிகளிலும் உடன் தொடர்பு கொள்ளவும.

(76293)

### அம்பாறை மாவட்டத்தில்

# தமிழ்க் கட்சிகளை ஒரே பட்டியலில் போட்டியிட வைப்பதற்கு முயற்சி!

மட்டக்களப்பு,ஜூலை9

எதிர்வரும் பொதுத் தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் தமிழ்க் கட்சிகளை பொதுப்பட்டியலில் போட்டியிட வைப்பதற்கான முயற்சியில் அம்பாறை தமிழர் மகா சபை ஈடுபட்டிருக்கின்றது.

இது தொடர்பாக ஆராய்வதற்காக தமிழர் மகாசபையின் முக்கிய கூட்டம் இன்று அம்பாறையில் நடைபெறுகிறது.

ஒரே பட்டியலில் போட்டியிடுமாறு தமிழ்க்கட்சிகளைக் கோரும் தீர்மானம் இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட இருக்கிறது.

1988ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் அம்பாறையில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பட்டியலில் சகல தமிழ்க் கட்சிகளும் இணைந்து போட்டியிட்டன. அதன் மூலம் ரெலோ சார்பில் திவ்வியநாதன் தெரிவு செய்யப்பட்டார்.

பின்னர் 94ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் தமிழ்க் கட்சிகள் பிரிந்து தனித்தனியாகப் போட்டியிட்டன. இதனால் அங்கிருந்து எந்தவொரு தமிழரும் நாடாளுமன்றுக்குத் தெரிவு செய்யப்படவில்லை என்பதை தமிழர் மகா சபை வட்டாரங்கள் சுட்டிக்காட்டி உள்ளன.

அம்பாறையில் ஈ.பி.ஆர்.எல்.எவ்., புளொட், ரெலோ ஆகியன பொதுவான பட்டியலில் போட்டியிட இணக்கம் தெரிவித்துள்ளதாக அறியவருகிறது.

ஈ.பி.டி.பியும் தமிழர் விடுதலைக் கூட்டணியும் இது குறித்து இன்னமும் முடிவுசெய்யவில்லை என்றும் -

அவை அனேகமாகத் தனித் தனியாகப் போட்டியிடக் கூடும் என்றும் -

அம்பாறைத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (உ-ஐ-21)

## ஷெரீபின் மனைவி கைது!

இஸ்லாமாபாத்,ஜூலை9

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் நவாஸ்ஷெரீபின் மனைவி நேற்று லாகூரில் வைத்து பொலீஸாரினால் கைது செய்யப்பட்டார்.

நேற்றுமுன்தினம் தொடக்கம் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டிருந்த திருமதி ஷெரீப் பொலீஸாரின் காவலை மீறி பேரணி ஒன்றில் கலந்து கொள்ளச் சென்ற போது பொலீஸார் அவரை விரட்டிச் சென்று கைது செய்தனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

(மற்றுமோர் செய்தி 3ஆம் பக்கத்தில்) (இ-5)

## தீர்வு யோசனை.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யில் அவர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

நாட்டின் ஒற்றையாட்சி முறையை மாற்றுவதற்கு தாங்கள் ஒப்புக்கொள்ளவில்லை என்று ஐ.தே.கட்சித் தலைவர்கள் கூறி வருவதைச் சுட்டிக்காட்டிய அவர்கள் அரசின் தீர்வு யோசனைகளுக்கு ஏற்பட்ட முதலாவது பின்னடைவு இதுவெனக் குறிப்பிடுகின்றனர்.

காணி தொடர்பான அதிகாரம் பிராந்திய சபைகளுக்கு வழங்கப்படாமல் அதை மத்திய அரசினால் ஏற்படுத்தப்படும் ஆணைக்குழு ஒன்றின் நிர்ணயத்துக்கு விடுவது என்று முடிவு செய்யப்பட்டிருப்பதும் கூட்டணி வட்டாரங்களை பெரிதும் அதிருப்திக்குள்ளாக்கி உள்ளது.

இது தமது தாயகத்தில் தமிழர்களைச் சிறுபான்மையாக்கும் - திட்டமிட்ட - சிங்களக் குடியேற்றத்துக்கு வழிவகுக்கும் ஒரு சதி யோசனை என்றே கூட்டணி வட்டாரங்கள் கருதுகின்றன.

தமிழ்க் கட்சிகளுடன் முன்னர் அரசு நடத்திய பேச்சுக்களின் போது இணக்கம் காணப்பட்ட பல அடிப்படை விடயங்களே உத்தேச தீர்வு யோசனைகளில் நீக்கப்பட்டு விட்டன என்று கூட்டணிப் பிரமுகர்கள் பொருமுகின்றனர்.

உத்தேச தீர்வு யோசனைகள் குறித்து எம்.பியான ஜோசப் பரராஜசிங்கம் உதயனுக்கு நேற்றிரவு தெரிவித்ததாவது:-

இனப்பிரச்சினைக்குத் தீர்வாக இதுவரை முன்வைக்கப்பட்ட யோசனைகள் எல்லாவற்றிலுமே ஆகக் குறைந்த அதிகாரப் பரவலாக்கலுக்கு வழி செய்யும் யோசனையே இது.

இந்த யோசனைகள் பெரும்பான்மை இனத்தவர் சிறுபான்மையினரை மேலும் அடக்கி நசுக்கவே வழிசெய்யும்.

இவ்வளவு இழப்புக்கள், போராட்டங்களின் பின்னர் திம்புக் கோட்பாட்டுக்கு குறைந்த எந்தத் தீர்வையும் - அரைகுறைத் தீர்வையும் - தமிழர்கள் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை.

தமிழரின் சுய நிர்ணய உரிமை, தமிழரின் வடக்கு - கிழக்கு இணைந்த தாயகக் கோட்பாடு, தமிழர் ஒரு தேசிய இனம் ஆகிய விடயங்களை அங்கீகரிக்கும் அடிப்படை மூன்று அம்சங்களையும் கொண்டிராத எந்தத் தீர்வும் இனி ஏற்கப்பட முடியாததாகும்.

தமிழர்களின் முக்கிய' பகுதியினராகிய விடுதலைப் புலிகளின் பங்களிப்பின்றி கொண்டுவரப்படும் எந்தத் தீர்வுத் திட்டமும் "மண்ணில் வேர் பிடிக்காத மரம் போல" விழுந்துவிடும் என்பதை அரசு உணர்ந்து கொள்ளவேண்டும் - என்றார். (உ)

## 6 விவசாயிகள்.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ள நாசகார குற்றத் தடுப்புப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

எஸ்.பரமலிங்கம் (வயது 34), என்.அம்பலவாணர் (வயது 45), எஸ்.துரைராஜசிங்கம் (வயது 24), எஸ்.தேவராஜா (வயது 22), பி.காண்டீபன் (வயது 20), பி.ஜெயச்சந்திரன் (வயது 19) ஆகியோரே கைது செய்யப்பட்டவர்களாவர். (உ)

## ஈழ அகதிப்பெண்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவர்களை இராமேஸ்வரம் கரையை நோக்கி தமது வள்ளத்தில் ஏற்றிச்சென்ற நான்கு இந்திய மீனவர்கள் இந்த அகதிகளில் ஒருவரான திருமதி பத்மநாதன் குமுதினி (வயது 23) என்ற இளம் பெண்ணை மட்டும் கரையிறங்க அனுமதிக்காமல் கடத்திச் சென்றதாகவும் கூறப்படுகின்றது.

இது குறித்து உடனடியாக கரையோரக் காவல் படையினரிடம் முறைப்பாடு செய்யப்பட்டது.

நேற்று தனுஷ்கோடிக்கு அருகில் ஓர் இளம் பெண்ணின் சடலம் கிடப்பதாகக் கிடைத்த தகவலை அடுத்து சம்பந்தப்பட்ட இளம் பெண்ணின் உறவினர்கள் அங்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அவர்கள் சடலத்தை அடையாளம் காட்டினர்.

அதே நேரத்தில் அங்கு வைத்தே சடலம் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதாக இந்தியச் செய்தி நிறுவன வட்டாரங்கள் தெரிவித்தன.

பிரேத பரிசோதனை முடிவுகளோ, அப்பெண் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டாரா என்பது பற்றிய ஏதேனும் தகவல்களோ இதுவரை வெளியாகவில்லை. (உ-164)

## நாவற்குழி........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ணிப் பாதுகாப்பு நிலைகள்மீது விடுதலைப் புலிகள் மோட்டார்த் தாக்குதல் நடத்தியதில் 7 படையினர் காயமடைந்தனர் எனவும் -

படையினர் பதில் மோட்டார்த் தாக்குதல் நடத்தி புலிகளின் தாக்குதலை முறியடித்து விட்டதாகவும் -

விசேட ஊடகத் தகவல் நிலையம் மேலும் தெரிவித்ததாக இலங்கை வானொலி நேற்றிரவு அறிவித்தது. (ஐ-7)

## இனப்பிரச்சினை.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தியா ஏற்றுக்கொள்ளத்தக்கவகையில் நாம் நடவடிக்கை எடுப்போம் என்று மட்டும் என்னால் உறுதி கூறமுடியும்.

"இலங்கை இனப்பிரச்சினை விடயத்துக்கு விரைந்து தீர்வு காணப்பட வேண்டும் என்று இந்திய தலைவர்கள் வலியுறுத்தியுள்ளனர். இந்தியாவின் எதிர்பார்ப்பும் விருப்பும் அதுவே." - இவ்வாறு அமைச்சர் ஜெயக்கொடி மேலும் தெரிவித்துள்ளார். (உ)

## பொலீஸ் மீது சூடு!

கொழும்பு,ஜூலை9

ஹெறாறணப் பகுதியில் வீதி ஒன்றில்நிறுத்தப்பட்டிருந்த ஓட்டோ ஒன்றினை சோதனை நடத்திய பொலீஸார் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் பொலீஸ் உத்தியோகத்தர் ஒருவர் கொல்லப்பட்டார்; ஒருவர் காயமடைந்துள்ளார்.

நேற்று மாலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் காயமடைந்த பொலீஸ் உத்தியோகத்தர் ஆபத்தான நிலையில் கொழும்புதேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## கப்பலில்.........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வர போதிய பயணிகள் இல்லாததே இதற்குக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டது.

போதிய பயணிகள் இல்லாமையால் இந்தக் கப்பல் நேற்று ஒரு லொறி 'லோட்' உருளைக்கிழங்கையும் திருகோணமலையிலிருந்து பருத்தித்துறைக்கு ஏற்றி வந்தது.

இத்தகைய நிலைமை நீடிக்குமானால் இந்தக் கப்பல் சேவையை நிறுத்திவிட்டு சரக்குக் கப்பலை பயணிகள் சேவைக்கு பயன்படுத்துவது குறித்து ஆலோசிக்கப்படுவதாகக் கூறப்படுகின்றது.

யாழ்ப்பாணத்தில் இன்னும் ஆயிரக்கணக்கான பயணிகள் கப்பலில் வெளிமாவட்டம் செல்வதற்காகக் காத்திருக்கின்றனர்.

பயணிகள் கப்பலுக்குப் பதிலாக சரக்குக் கப்பலைப் பயன்படுத்தினால் திருகோணமலையிலிருந்து வரும்போது போதிய பயணிகள் இல்லாத பட்சத்தில் [illegible] குகளை ஏற்றிவர முடியும் என்றும் கருதப்படுகிறது. (இ-164)

## மன்னார்.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதுவரை காலமும் தாமதப்படுத்தப்பட்டு வந்தது.

'கொண்ரெயினரில்' உள்ள கருவி கோபுரத்துடன் இணைக்கப்பட்டு - அது தொடர்பான பணிகள் பூர்த்தியானதும் - அநேகமாக அடுத்த இரண்டு வாரங்களுக்குள் - மன்னார் ஊடான இணைப்பு யாழ்ப்பாணத்துக்குக் கிட்டுமென நம்பப்படுகின்றது.

நுண் அலை மூலமாக பெரும்பாலும் 120 வெளி இணைப்புக்கள் யாழ்ப்பாணத்துக்குக் கிட்டுமென்றும் -

அவற்றின் மூலம் தற்போது யாழ்ப்பாணத்தில் சீர்கெட்டிருக்கும் தொலைபேசிச் சேவை வழமைக்குத் திரும்பும் என்றும் - நம்பப்படுகின்றது.

தற்போது யாழ். ரெலிக்கொம் பரிவர்த்தனை நிறுவனத்துக்கு வழங்கப்பட்டுள்ள - செய்மதி மூலமான - தொலைத் தொடர்பு இணைப்பை சீர்செய்யும் பணி, சம்பந்தப்பட்ட அமெரிக்க நிறுவன நிபுணர்களால் கொழும்பில் மேற்கொள்ளப்பட்டு வந்தது.

இந்தப் பணி அநேகமாக இன்று பூர்த்தியாகும் என்றும் -

அதன் பின் செய்மதி ஊடான ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கை தொலைபேசிச் சேவை சீராகுமென்றும் -

முன்னர் எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் அமெரிக்காவில் இருந்து மேலும் சில கருவிகளை எடுத்து வந்தால் மட்டுமே இச்சேவையை நேர்சீராக மேற்கொள்ள முடியுமென்றும் -

அதற்கு மேலும் காலதாமதமாகும் என்றும் -

செய்மதி ஊடான இணைப்புகள் ஒழுங்குபடுத்தப்படுவதற்கு முன்னர் மன்னார் ஊடான நுண் அலை மூலமாக இணைப்புக் கிடைத்துவிடுமென்றும் -

சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் உதயனுக்குத் தெரிவித்தன. (உ-164)

# வெள்ளை வானில் வந்தோரால் மாணவன் கடத்தப்பட்டார்!

## மொறட்டுவவில் சம்பவம்

கொழும்பு,ஜூலை9

மொறட்டுவ பல்கலைக்கழகப் பொறியியல் பீட மூன்றாம் வருட மாணவனான சக்திவேல் என்பவர் நேற்றுமுன்தினம் மாலை வெள்ளை வானில் வந்த இனந்தெரியாத நபர்களினால் கடத்திச் செல்லப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மொறட்டுவவில் உள்ள தனியார் தொலைத் தொடர்பு நிலையம் ஒன்றுக்குச் சென்று வெளிநாட்டில் உள்ள உறவினருடன் தொலைபேசியில் உரையாடி[illegible]டுத் திரும்பிய சமயமே [illegible] கடத்தப்பட்டிருக்கிறார். இது குறித்து அந்த தொலைத் தொடர்பு நிறுவன உரிமையாளர் பொலீஸில் முறைப்பாடு செய்துள்ளதாகத் தெரியவந்தது.

இந்த மாணவன் தொடர்பான மேலதிக விவரங்கள் தெரியவரவில்லை. (ஐ-164)

# விரைவில் நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம்,ஜூலை9

ஆரம்பக் கல்விப் போதனைக்கான பயிலுநர் ஆசிரியர்கள் பதவிக்கு விண்ணப்பித்து நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டோருக்கு விரைவில் நேர்முகப் பரீட்சைக்கான அழைப்பு அனுப்பப்படும்.

இதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட பிரதி அமைப்பாளர் திரு. நிஷாந்தன் தெரிவித்தார்.

தமது கட்சி இது குறித்து அதிகாரிகளுடன் நடத்திய பேச்சுக்களை அடுத்து இதற்கான உறுதிமொழி வழங்கப்பட்டதாக அவர் தெரிவித்தார். (உ)

# இரு துணை ஜனாதிபதி பதவிகளை ஏற்படுத்த அரசு - ஐ.தே.க. இணக்கம்

உத்தேச அரசமைப்புச் சீர்திருத்தத்தில் தமிழர் மற்றும் முஸ்லிம்கள் சார்பாக தலா ஒவ்வொருவருக்கு துணை ஜனாதிபதி பதவி வழங்கக் கூடியதாக இரண்டு துணை ஜனாதிபதி பதவிகளை ஏற்படுத்துவது என அரசும் ஐ.தே.கட்சியும் இணக்கம் கண்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

"உத்தேச அரசமைப்புச் சீர்திருத்தத்தின் கீழ் நிறைவேற்று ஜனாதிபதியின் அதிகாரங்களே இல்லாதொழிக்கப்படும் போது, துணை ஜனாதிபதி பதவியினால் சிறுபான்மை சமூகத்துக்கு என்ன பயன் கிட்டப் போகின்றது?" - என்று தமிழ்க் கட்சிகள் கேள்வி எழுப்பியுள்ளன. (உ)

# தென்னாபிரிக்கா வெற்றி

கொழும்பு,ஜூலை9

சிங்கர் கிண்ணத்துக்கான முத்தரப்பு ஒரு நாள் சர்வதேச போட்டித் தொடரில் நேற்று கொழும்பு பிரேமதாஸ விளையாட்டரங்கில் தென்னாபிரிக்க - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையில் நடைபெற்ற மூன்றாவது ஆட்டத்தில் தென்னாபிரிக்க அணி 18 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி ஐம்பது ஓவர்கள் நிறைவில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து 241 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி ஐம்பது ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 223 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

இந்தத் தொடரில் இன்று கொழும்பு பிரேமதாஸ விளையாட்டரங்கில் நடைபெறும் பகல்இரவு ஆட்டத்தில் இலங்கை - பாகிஸ்தான் அணிகள் மோதவுள்ளன.

## ஒருவர் உயிரிழப்பு

நாகர்கோயில்பகுதியில் நேற்று இடம்பெற்ற எதிர்பாராத மோதலில் எல்லைப்படையைச் சேர்ந்த ஆனந்தன் (வேலு ஆனந்தகுமார், உடையார்கட்டு) என்பவர் உயிரிழந்ததாக புலிகளின் குரல் வானொலி நேற்றிரவு அறிவித்தது. (இ-4)


## மேவின் தையல் நிலையம்

**வாடிக்கையாளர்களே!**

இல-92, யாழ்.வீதியில் இயங்கி வந்த மேவின் தையல் நிலையம் அனைவரின் நன்மைகள் கருதி இல.28, நவீனசந்தை மேல்மாடி (யாழ். வர்த்தக சங்கத்திற்கு அருகில்) 10-07-2000 திங்கட்கிழமை முதல் உங்கள் தேவைக்காய் சேவையாற்ற ஆரம்பமாகின்றது என்பதனை அனைவருக்கும் பெருமகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

**அன்றும்!**

**இன்றும்!**

**என்றும்!** *உங்களை அலங்கரிக்கும் ஒரு நிறுவனம் மேவின் தையல் நிலையம். ஆண்களுக்கான சகல விதமான ஆடைகளைச் சிறந்த முறையில் நவீன உலகிற்கு ஏற்றவகையில் தைத்து வழங்குபவர்கள்.*

மேவின் தையல் நிலையம்,

உரிமையாளா
அ.மேவின்.

(76303)

## வெங்காயம், புகையிலை, திருகோணமலைக்கு அனுப்புவோர் கவனத்திற்கு

வெங்காயம், புகையிலை மற்றும் உள்ளூர் உற்பத்திப் பொருள்களை 'பொல்கொட' கப்பல் மூலம் திருகோணமலைக்கு அனுப்ப விரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும். இம்முறையும் வெங்காயம் பெட்டிகளில் ஏற்றவே ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

*விவரங்களுக்கு:*

**ஜெசிபா ஏஜென்சி**

132, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம.

தொலைநகல்: 2440 தொலைபேசி: 2407

(C/12168)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 09-07-2000இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.